www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—31 ஆகஸ்ட் '89
3 _ 19
விலை ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## தமிழனைப் பரதேசியாக நடத்தும் பாசிச ராஜீவ்

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

● ஒரு ரூபாய்க்கு தரமான இதழை வாசகர்களுக்குத் தரும் தங்களின் சேவை பாராட்டத் தக்கது. இதழில் இடம் பெறும் அனைத்து கட்டுரைகளும் சிந்தனையைத் தூண்டி வாசகர்களை விழிப்படையச் செய்கின்றன. உழைக்கும் வர்க்க விடுதலைக்கு உரத்த குரல் கொடுக்கும் உங்களது புரட்சிப் பணிக்கு புரட்சிகர வாழ்த்துக்கள்.

புரட்சி நம்பி — இ. பெ. கோயில்

● ஓட்டுக்காக அரசியல்வாதிகள் நாயாகவும் பேயாகவும்கூட மாறத் தயங்கமாட்டார்கள் என்பதை இதழ் எண் 15-ன் 'இதுதான் இன்றைய இந்தியா' தெளிவாக விளக்கியது. மக்கள் பணத்தில் கும்மாளமடிக்கும் இந்த குள்ள நரிகள் மக்களைக்கவர அடிக்கும் ஸ்டண்டுகள் எத்தனை, எத்தனை?

வை. இராமலிங்கம் — வல்லம்

✱ உழைப்புச் சுரண்டல் ஒரு புறம்; நவீனமயம் என்ற பெயரில் வேலை இழப்பு மறுபுறம். இதை நண்பர் விஷ்ணுவர்த்தன் இதழ் எண் 15-ல் தெளிவாக விளக்கியுள்ளார். தொலைபேசித் துறையில் பணியாற்றும் நாங்கள் இதை நேரடியாக அனுபவித்து வருகிறோம். இப்போதே ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். தினக்கூலி என்ற பெயரில் 10 வருடமாக உழைக்கும் தொழிலாளிகளை இந்த நவீனமயம் வீட்டுக்கு அனுப்பிவிடும். மனித சக்திக்கே வேலை கொடுக்க வக்கற்ற ஆட்சியாளர்கள் கம்ப்யூட்டரையும் பொருத்தி உழைப்பாளிகளை வீதியில் வீசியெறிய துணிந்துவிட்டார்கள். இவர்களின் முகமூடி விரைவில் கிழியத் போகிறது.

வாசகர்கள் — திண்டிவனம்

✱ இதழ் எண் 15-ன் இன்றைய இந்தியா பகுதியில் தொப்பியணிந்துள்ளல்லை. ராஜீவ் மண்ணரை அஞ்சலி செலுத்துவது வேண்டுமானால் பாமரர்களைத் திருப்திப் படுத்தலாம். ஆனால்இஸ்லாமியக் கொள்கையின்படி வாழும் முஸ்லிம்களுக்கு எரிச்சலைத்தான் ஊட்டும்.

ரசூல் மொய்தீன் — சென்னை

● புதிய ஜனநாயக இதழ் மாதம் இருமுறை என்ற நிலையை மாற்றி வார இதழாகக் கொண்டுவர வேண்டுகிறோம். மேலும், இதழின் வருகையை தாமதப்படுத்த வேண்டாம். 'இதுதான் இன்றைய இந்தி(யா)?' இதழின் தனிச் சிறப்பு. அரசியல் தரகர்கள், ஓட்டுப் பொறுக்கி நாய்கள் ஆகியோரது முகமூடியைக் கிழிக்கும் புதிய ஜனநாயகத்தின் புரட்சிப் பணி நீடிக்க—நிலைக்க வாழ்த்துகின்றோம்.

வாசகர்கள் — மன்னார்குடி

✱ இதழ் எண் 14-ல் வெளியான சினிமா நடிகை கற்பழிப்பு விவகாரம் என்ற கட்டுரை சினிமா நடிகர்கள் எதார்த்தத்தில் எப்படி உள்ளனர் என்பதை விளக்கி, நடிகர்கள் மீதான பாமர மக்களின் மாயையைக் களைய பெருமளவு உதவியது. தோழர்காளியப்பனின் சிறை அனுபவம் உத்வேகமூட்டக் கூடியதாக இருந்தது. இது போல இதழ் எண் 15-ல் இதுதான் இன்றைய பகுதியில் மு.க. வையும் ராஜீவையும் அம்பலப்படுத்தியது சிறப்பானது. வாசகங்களை இரத்தின சுருக்கமாகவும் படங்களைப் பெரியதாகவும் போடக் கோருகிறோம். ஈழத்திலிருந்து திரும்பிய ராணுவம் மகிழ்ச்சிக் களிப்பில் இருப்பதானது, சொந்த நாட்டிற்குத் திரும்பி விட்ட மகிழ்ச்சியால் அல்ல; மாறாக, ஈழ மக்களிடமிருந்து தப்பி வந்துவிட்டோம் என்ற நிம்மதியால் ஏற்பட்ட மகிழ்ச்சி என்று படத்திற்குப் பொருத்தமான அடிக்குறிப்பு எழுதியதுசிறப்பானது. 'நாடோடிகளாக விவசாயிகள்' என்ற தலைப்பில் அவர்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டிய விதம் பாராட்டுதலுக்குரியது. இது போன்ற செய்திகளை மேலும் எதிர்நோக்குகிறோம்.

வாசகர் வட்டம் — கல்லைவட்டம்

✱ இதழ் எண் 15-ல் பாசிச விதேசி ராஜா என்ற தலைப்பில் தேச விரோத மக்கள் விரோத பாசிச ரரஜீவ் கும்பலைத் தோலுரித்துக் காட்டியது மிகச் சிறப்பானது. புரட்சியை நேசிக்கும் எம்போன்ற இளைஞர்களுக்கு அது புதுப்பாடமாய் இருந்தது.

ரவின் — மானாம்பதி

● மாஜி கம்யூனிஸ்டு கருப்பூர் கல்யாண சுந்தரம் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். ஆளும் வர்க்கத்திற்கு ஜால்ரா தட்டுவதையே தன் வாழ்வின் அரசியல் லட்சியமாகக் கொண்டவரும், ம. பொ. சியை விஞ்சும் வகையில் சந்தர்ப்பவாதத்தைக் கொள்கையாகக் கொண்டவருமான ரஷிய அடிவருடி மரணமடைந்து விட்டார். அவரால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஈழமக்கள் சார்பில் அவரது ஆன்மா சாந்தியடைய 'அஞ்சலி' செலுத்துகிறேன்.

இரா. க. கிருஷ்ணன் — தி. நகர்

● அரசியல் தலைவர்கள் வழிபாடு, சினிமா கதாநாயகர்கள் வழிபாடு—இவற்றை பெரியசெய்தியாகவும் தலையங்கமாகவும் வெளியிட்டு மூலதன முதலைகள் நடத்தும் சீரழிந்த பத்திரிக்கைகளைக் குறைவில்லாமல் கொண்டிருக்கும் தமிழகத்தில் புதிய ஜனநாயகம் போன்ற புரட்சிகர பத்திரிக்கைகளை முழுமனதுடன் வரவேற்கிறோம். எமது போராட்டத்தையும் எமது விடுதலை இயக்கங்களையும் தெளிந்த கண்ணோட்டத்துடன் எழுதும் புதிய ஜனநாயகத்திற்கும், இந்திய ஆக்கிரமிப்பிற்கெதிராக தீரமிக்கப் போராட்டங்களை நடத்தி வரும்புரட்சிகர அமைப்புகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இ. அன்ரனி — மேற்கு ஜெர்மனி

● 1—15 ஜூன் 88 இதழில் தோழர் காளியப்பன் வடித்திருந்த 'எதிரியின் கோட்டைக்குள்ளேயே இடிமுழக்கம்' என்ற கட்டுரை சிறைக்குள்ளே நடந்த சித்தாந்தப் போராட்டத்தை தெளிவாக வெளிக்காட்டியது. தமிழக மக்கள் முன்னணியினருக்கு தேர்தல் பாதை 'தேவ' பாதையாகத் தெரிகிறது. 84 தேர்தலின் போதே 'தேர்தலில் குறுக்கிடுவோம்' என்ற சமரச அடிக்கோளில் உருவான கட்டடம் இப்போது வேகமாக வளர்ந்துள்ளது. ஏகாதிபத்திய எடுபிடிகளான தன்னார்வக் குழுக்களிடம் சோரம் போய் மக்கள் தலைவர்களாகவும் மக்கள் கவிஞர்களாகவும்வட்டம் சேர்த்து வரும் இவர்களை அம்பலப்படுத்துவது அவசியம். அதே போல 84 தேர்தலில் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று சென்னையில் ஒரு பிரச்சாரமும் பின்னர் அவ்வாறு நிகழ்ந்தது தவறான வழிகாட்டுதலால்தான் என்று சுயவிமர்சனத்துடன் மற்ற பகுதிகளில் மௌன ஆதரவும் கொடுத்த கேடயம்—மனஓசை கும்பலைத் தோலுரித்துக் காட்டுவதும் அவசியம். புதிய ஜனநாயகம் நிச்சயம் அதைச் செய்யுமென்று நம்புகிறேன்.

செவ்வண்ணன் — சென்னை



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

19

16—31 ஆகஸ்ட் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)

தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# நாறுது நாடாளுமன்றஜனநாயகம்

இரண்டாவது தடவையாகக் கர்நாடக முதல்வர்பதவியைஇராமகிருஷ்ண ஹெக்டே இராஜினமா செய்துள்ளார். முதல்தடவை சாராய லைசென்சுமுறைகேடு குறித்து நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. அப்போது ஹெக்டேயின் கையைப் பிடித்து, காலைப் பிடித்து கர்நாடகா ஜனதாக் கட்சி எம்எல்ஏக்கள், மந்திரிகள் கதறினர். இராஜினாமா நாடகம் முடிந்துபதவியில் நீடித்தார். இப்போது எதிர்க்கட்சி, தனது கட்சிப் போட்டிப் பிரிவுபிரமுகர்கள் மற்றும் பத்திரிக்கையாளரது டெலிபோன் பேச்சுக்களை ஒட்டுக் கேட்டதாக வந்து நிருபணமான புகாருக்குத் தார்மீகப் பொறுப்பேற்று ஹெக்டே இராஜினமா செய்துள்ளார்.

அகில இந்திய ஜனதாக் கட்சித் தலைமையைக் கைப்பற்றவும், தக்கவைத்துக் கொள்ளவும் ஹெக்டேவுக்கும் சந்திரசேகருக்கும் கடந்த சிலமாதங்களாகப் பதவிச் சண்டை நடக்கிறது. பிறகு பிரதமர் பதவிக்கு இருவருமே குறிவைக்க மேலும் அது வலுத்தது. கர்நாடகாவில் தனது கூட்டாளி தேவ கௌடாவைத் தூண்டிவிட்டு ஒரு போட்டிக் கும்பலை உருவாக்கி ஹெக்டேக்குத் தீராத தலைவலியை ஏற்படுத்தினார் சந்திரசேகர். சந்திரசேகர்—அஜித் சிங் கும்பல் தனது ஆட்சிக்கு எதிராக சதி செய்வதாக ஹெக்டே குற்றஞ் சாட்டினார். இதை நிரூபிக்கும் வகையில் அஜித் சிங்குக்கும் கௌடாவுக்கும் இடையில் நடந்த டெலிபோன் உரையாடலை ‘‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’’ ஏடு வெளியிட்டது. இது நேர்மையற்ற ஒட்டுக் கேட்கும் முறை என்று தேவ கௌடா சாடினார். டெல்லி உளவுத் துறையிடமிருந்துதான் உரையாடலைப் பெற்றதாக ‘‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’’ ஏடு கூறியது.

ஏற்கனவே லஞ்ச—ஊழல் குற்றங்கள் வெளிப்பட்டு, மக்கள் மத்தியில் தார்மீக பலமிழந்து தனிமைப்பட்டுப் போயுள்ளது பாசிசராஜீவ் கும்பல். தேர்தல் தோல்விகள், எதிர்க்கட்சிகளின் ஐக்கியம் மற்றும் கூட்டணி அமைப்பு காரணமாக பீதியடைந்தும் போயுள்ளது. எனவே ஜனதாக் கட்சிக்குள் நடக்கும் பிளவையும் பதவிச் சண்டையையும் பயன்படுத்திக் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுக்க முடிவு செய்தது ' பாசிச ராஜீவ் கும்பல் தனது ஆதரவு ‘‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’’ ஏட்டிலும் நாடாளுமன்றத்திலும் நன்கு திட்டமிட்டு டெலிபோன் ஒட்டுக் கேட்ட விவகாரத்தை அம்பலப்படுத்தியது.

1986 ஜூனில், ‘‘பொதுமக்கள் பாதுகாப்பு நலனுக்காக’’ அரசியல் பிரமுகர்களின் டெலிபோன்களை ஒட்டுக் கேட்கும்படி கர்நாடகா உளவுப் பிரிவு போலீஸ் டி.ஐ.ஜிக்கு தலைமைச் செயலாளர் உத்திரவு போட்டார். 1987 பிப்ரவரியில் அவருக்கே கர்நாடகா உள்துறை செயலாளர் உத்திரவுபோட்டார் என்கிறஆதாரங்களும், ஒட்டுக் கேட்கப்பட்ட பிரமுகர்களின் பட்டியலும் வெளியாகியுள்ளது.

விவகாரம் அம்பலமாகி ஹெக்டே இராஜினமா செய்தவரை பாசிச ராஜீவ் கும்பலின் நோக்கம் நிறைவேறியது. ஆனால் ‘‘கிணறுவெட்ட பூதம் கிளம்பிய’’ கதையாக விவகாரம் பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிராகவேதிரும்பியுள்ளது. ● கர்நாடகத் தலைமை மற்றும் உள்துறை செயலாளர்களின்உத்திரவின் பேரில் கர்நாடகா உளவுத்துறை போலீசு உயர் அதிகாரிகள் இந்த ஒட்டுக் கேட்கும் வேலையைச் செய்தனர். இருந்தாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள டெலிபோன் துறைதான் அதைச் செயல்படுத்தியுள்ளது. ● மத்திய அரசும், எல்லா மாநில அரசுகளும் தவறாது, தொடர்ந்து இந்த ஒட்டுக் கேட்கும் முறைகேட்டைச் செய்து வருகின்றன. அரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங் முதல் தேவிலால், ஹெக்டே போன்ற எதிர்க்கட்சி முதல்வர்கள் மற்றும் தலைவர்கள், காங்கிரசின் தலைவர்கள்வரை அவர்களுடைய டெலிபோன் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. எனவே ஹெக்டே செய்ததைப் போல தார்மீகப் பொறுப்பேற்று பிரதமர் ராஜீவும் ராஜினமா செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோருகின்றன. ● 1985 டெலிகிராப் (தந்தி) சட்டப்படி காலனிய காலத்திலிருந்து இந்த முறைகேடு தொடர்ந்து, தவறாது நடக்கிறது. இது போதாதென்று தபால்களைக் குறுக்கிட்டுத் தணிக்கை செய்யும் கருப்புச் சட்டம் ஒன்றையும் ராஜீவ் கும்பல் நிறைவேற்றியுள்ளது. தந்திச் சட்டத்தைத் திருத்தப் போவதாக திடீர் அக்கறையோடு பிரகடனப்படுத்தியுள்ளார் ராஜீவ். இந்தச் சட்டத்தைத் திருத்துவதோடு ராஜீவ் புதிதாகக் கொண்டு வந்துள்ள தபால் தணிக்கைச் சட்டத்தையும் கைவிடும்படி எதிர்க்கட்சிகள் கோருகின்றன. ● நாடு முழுவதும் டெலிபோன் ஒட்டுக் கேட்கப்படுவது குறித்து நீதி விசாரணை நடத்தும்படி ஹெக்டே கோரியதை நிராகரித்துவிட்ட பாசிச ராஜீவ் இப்போதுஇஞ்சிதின்ற குரங்காகமுழிக்கிறார்.

அரசியல் நேர்மை, தனிமனித சுதந்திரம், தனிமனித இரகசிய உரிமை பற்றி பீற்றும் இந்த ஒட்டுப்பொறுக்கிகள் அத்தனை பேரும் தொடர்ந்துஅவற்றுக்கு மாறாக அயோக்கித்தனம் செய்து வந்துள்ள உண்மையை டெலிபோன் ஒட்டு கேட்கும் இந்த விவகாரம் அம்பலப்படுத்திவிட்டது. இவர்களின் ஜனநாயக முன்னோடிகளும் காலனிய எஜமானர்களும் ஆன ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளே இன்னமும் இந்த அரசியல் அயோக்கியத்தனத்தைச்செய்து வருகிறார்கள். மேனிமினுக்கி மக்களை ஏய்க்க இவர்களுக்கு உதவும்நாடாளுமன்ற ஜனநாயகம் உள்ளுக்குள் எப்படி புழுத்து நாறுகிறது என்பதற்கு மேலும் ஒரு சான்றாகும் இந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம்.

www.padippakam.com

ஆறு மாதங்களில் நாலாவது முறையாகத் தமிழ்நாட்டுக்கு வந்து போயிருக்கிறார் பாசிசராஜீவ், பரிவாரங்களுடன். இலங்கை ஆக்கிரமிப்பு—ஈழப் போரை நியாயப்படுத்தவும், எதிர்வரும் தமிழகத் தேர்தலைக் குறி வைத்தும்தான் இப்படி அடிக்கடி இங்கே வந்து ஆலவட்டம் போடுகிறது பாசிச கும்பல். திடீரென்று தமிழ் மக்கள் மீது கரிசணை கொண்டு கருணை மழை பொழிகிறது அந்தக் கயவாளிக் கூட்டம்.

பாசிச ராஜீவ் கும்பல்—அது ஆயுத பேரங்கள் அந்நிய வியாபாரங்கள், கருப்புப் பணக் குடியிருப்புகள் மூலம் சொந்த நாட்டையே சூறையாடும் கொள்ளைக் கூட்டம்.

பாசிச ராஜீவ் கும்பல்—அது இந்திய, ஈழ மக்களைக் கொன்று குவித்து மனிதரத்தம் குடிக்கும் கொலைகாரக் கூட்டம்.

பாசிச ராஜீவ் கும்பல்—வறட்சி—பஞ்சம்—பட்டினி, அனல் காற்று, கடுங்குளிர், பெரு வெள்ளம், கொடிய கொள்ளை நோய்களால் ஏழை எளிய மக்கள்செத்து மடியும்போது மக்கள் சொத்தை அள்ளிக் கொண்டு உல்லாசமாக, ஊதாரியாக உலகம் சுற்றும் சுகபோகிகளின் கூட்டம். —இதுவும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

எனவேதான் பாசிச ராஜீவ் கும்பல் ஓட்டுக் கேட்டுப் போன இடங்களில் எல்லாம் உதைவாங்கி திரும்புகிறது. மேற்கு வங்கம், கேரளா, அரியானா மற்றும் பிற மாநில மக்கள் எட்டி உதைத்தார்கள். குப்புற விழுந்த பாரிசராஜீவ் கும்பல் மண்ணை உதறிவிட்டு தமிழ்நாட்டுக்கு ஓடி வந்து பல்லிளிக்கிறது. கும்பிடு போடுகிறது.



தமிழ்நாட்டு மக்களை எப்படியும் ஏமாற்றிவிடலாம் என்று எண்ணி இங்கே வளைய வளைய வருகிறது. அப்படி அது நம்புவதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

அவசர நிலை பாசிச ஆட்சியின் இறுதியில் நடந்த பொதுத் தேர்தல்களில் பாசிச இந்திரா எதிர்ப்பு அலை வீசியது. பாசிச இந்திரா—சஞ்சய் கும்பல் மண்ணைக் கவ்வியது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் இந்திரா—எம்ஜிஆர் கும்பல் வெற்றி பெற்றது. அதற்கு முன்னும் பின்னும் எம்ஜிஆருடனோ, கருணாநிதியோடோ கூட்டு சேர்ந்து பாசிச இந்திரா கும்பல் வெற்றி பெற்று வருகிறது.

பொறுக்கி அரசியலில் பாரம்பரியமிக்க தமிழ்நாடு இன்று நாட்டிலேயே முன்னோடியாக நிற்கிறது. அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கவர்ச்சித் திட்டங்களையும் முழக்கங்களையும் முன்வைத்து அரசியல் செல்வாக்கு பெற்றுவிடமுடியும் என்று பாசிச ராஜீவ் கும்பல் கனவு கண்கிறது.

தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிவிட முடியும் என்கிற அளவுக்கு அது தனது கனவை வளர்த்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கனவை நனவாக்குவதற்கான வேலைகளில் இறங்கிவிட்டார்கள் மூப்பனாரும்சிதம்பரமும். ராஜீவின் டூன்பள்ளி சகபாடியும் பிரதமர் அலுவலகத் துணைச் செயலாளருமான மணி சங்கர்ஐயர் அதற்கான ஒப்பனை வேலைகளைச் செய்து இயக்குகிறார். பாசிச ராஜீவின் தமிழக சுற்றுப் பயணங்கள் எல்லாம் இதைத்தான் காட்டுகின்றன.

## பாசிச ராஜீவின் தான தர்மம்

பாசிச வக்கிர—கோமாளி எம்ஜிஆர் தமிழக மக்களைக் கவர்வதற்குக் கையாண்ட உத்திகளை காப்பியடிப்பது தவிர பாசிச ராஜீவ் கும்பல் வேறெதையும் செய்யவில்லை. அந்த உத்திகளிலே முதன்மையானது எம்ஜிஆரைப் போல ராஜீவ் ஒரு கொடை வள்ளல், ஏழை எளிய மக்களுக்குத் தானதர்மம் செய்யும் தயாள குணவான் என்ற கருத்தை உருவாக்குவது.

செஞ்சியில் தொடங்கி கரூர் வரை தென்ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் போன ராஜீவ் லட்சோப லட்சம் மக்களை சந்தித்தாராம்! வழி நெடுக ஏழை எளிய மக்களுக்குப்பட்டாடை, பொன்னாடை, கதராடை, கைத்தறி ஆடைகளும் பணம் 50, 100 என்று பணத்தை வாரி வாரி வழங்கினாராம்!

வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள் வேலையைப் பாதியில் போட்டுவிட்டு ராஜீவைக் காண ஓடி வந்தார்கள். அவர்களுக்குக் கையில் இருந்த பட்டாடை, பொன்னாடை, கதராடைகளை வாரிவழங்கினார். சீர்காழி அருகே திருமுலைப்பால் கிராமத்தில் ராஜீவைக் காணக் காத்திருந்த நரிக்குறவர்களுக்கு கைத்தறி, கதர் ஆடைகளை பிரதமர்வழங்கினார். சட்டநாதபுரம் அருகே திடீரென்று ஒரு 'அரிசன' குடியிருப்புக்குள் புகுந்து ஒரு முதியவருக்குத் தனது பட்டாடையைப் போர்த்துவிட்டார். முதியவர் மனம் நெகிழ்ந்து பிரதமரின் அன்பு கண்டு கண்ணீர் மல்கினார்.

வழியில் ஒரு கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்த பெண்ணிடம் குழந்தையை வாங்கி கொஞ்சி ''இந்திரா'' என்று பெயரிட்டார். 50 ரூபாய் பரிசளித்தார். ஸ்ரீரங்கம் கோவிலில் ராஜீவுக்கு பாசி மாலை அணிவிக்க ஓடிவந்த நரிக்குறவர் சமூகத்தினரிடம் மாலையைப் பெற்றுக் கொண்டு 50 ரூபாய் பரிசளித்தார். திருச்சி குடிசைப் பகுதிக்குள் நுழைந்த போது உடல் ஊனமுற்றிருந்த அரிசன சிறுமிக்கு 1000 ரூபாய் உதவியளித்தார். கரூர் போகும் வழியில் நாகனூரில் 'அரிசன' குடியிருப்பை திறந்து வைத்தவர் திடீரென்று ஒரு வீட்டுக்குள் புகுந்து என்ன குழம்பு வைக்கப் போகிறாய் என்று கேட்டறிந்தார். அந்தப் பெண் கத்தரிக்காயைக் காட்டி சாம்பார் என்று சொன்ன பிறகு திரும்பி வந்தார். காரில் காத்திருந்த மனைவி சோனியா அந்தப் பெண்ணுக்கு ஏதாவது உதவி செய்யும்படி கோரியதன் பேரில் 100 ரூபாயும், ஒரு சால்வையும் கொடுத்தனுப்பினார். அவற்றைப் பெற்றுக் கொண்டு




## ராஜீவின் தமிழக சுற்றுப் பயணம்
# இன்னுமொரு எம்ஜி ஆர்-ஆக முயற்சி!



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பெண் மகிழ்ச்சி தெரிவித்த பின் பயணம் தொடர்ந்தார்.

தஞ்சையில் இருதய அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காக ஒரு சிறுமிக்கு ஏற்கனவே 10,000 ரூபாய் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து உதவியிருந்தார் ராஜீவ். அந்தச் சிறுமியைக் கண்டு உடல் நலம் விசாரித்து மேலும் உதவுவதாக வாக்களித்தார்.

எம்ஜிஆர் சினிமாவில் நடித்துச் சம்பாதித்த கருப்புப் பணத்தில் ஒரு சிறு பகுதியை தானம் செய்து, பத்திரிக்கைகளைக் கொண்டு விளம்பரம் செய்து கொடை வள்ளலானார். இந்த பாசிச ராஜீவோ மக்கள் பணத்தையே எடுத்து சில்லரைகளை விட்டெறிந்து விளம்பரம் செய்து வள்ளலாகப் பார்க்கிறார். நாட்டைக் கொள்ளையிட்டு மக்களை அரை நிர்வாண, அரை—முழுப் பட்டினி நிலைக்குத் தள்ளிய பரம்பரை' ஆட்சியாளர்கள் ஏதோ சிலருக்கு துண்டுத் துணிகளையும், சில்லரைக் காசுகளையும் (அது பட்டாடையாக இருந்தாலும், 50, 100 ரூபாயாக இருந்தாலும்) வீசி எறிந்து பிச்சைக்காரர்களைப் போல கருதி அவமானப்படுத்துகின்றனர்.

### பாசிச ராஜீவுக்கு மக்கள் மீது வந்த கரிசனை

எம்ஜிஆரைப் போலவே ஆடம்பர, வக்கிர, உல்லாச வாழ்க்கையை இரகசியமாக நடத்திக் கொண்டே ஏழை எளிய மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார் பாசிச ராஜீவ். இதிலும் எம்ஜிஆர் உத்தியையே காப்பியடித்திருக்கிறார்.

திண்டிவனம் அருகே நேரு, இந்திரா, பாரதமாதா, பாரதி போன்ற வேடமணிந்த பள்ளி மாணவிகள் ராஜீவ் தம்பதிக்கு வரவேற்பு அளிக்கும் வகையில் சாலையில் நின்று கொண்டிருந்தனர். ராஜீவ் ஜீப்பை விட்டு இறங்கிப் போய் குழந்தைகளின் கன்னத்தை தட்டிக் கொடுத்து கொஞ்சி மகிழ்ந்தார். குழந்தைகளும் கைகளைக் கொட்டி மகிழ்ந்து வாழ்த்து முழக்கங்களை எழுப்பினர். அதே போல நேரு வேடம் போட்டுக்கொண்டு திருச்சியில் நின்ற 5 வயது சிறுமியை முத்தமிட்டு மகிழ்ந்தார்.

கீழத் தஞ்சையில் திடீரென்று ஒரு 'அரிசன' காலனிக்குள் நுழைந்து வேலை நிலைமைகளை கேட்டறிந்தார். காவிரி நீரின்றி வேலை வாய்ப்பின்றி கஷ்டப்படுவதாக ஒரு அரிசன கூலி விவசாயி கூறக் கேட்டு ராஜீவ் வருந்தினார். ஆறுதல் சொன்னார் இன்னொரு அரிசனக் காலனிக் குடிசைக்குள் திடீரென்று புகுந்து குடிக்கத் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்தார். மக்கள் எப்படிப்பட்ட தண்ணீரைக் குடிக்கிறார்கள் என்று அறிந்து திருப்தி கொண்டார். புத்தூர் சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக் அருகே ராஜீவ் வந்தபோது அவரைக் காண ஒரு மாணவர் ஓடி வந்தார். அந்த மாணவனிடம் தொழில் நுட்பப் படிப்பு விவரத்தைக் கேட்டறிந்தார். படிப்பில் கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தினார். லால்குடிக்கு ராஜீவ் வந்தபோது அவரைக் காண கூட்டம் முண்டியடித்து முன்னேறியது. பாதுகாப்புக்கு கட்டியிருந்த வரிச்சு கம்புகுத்தி 10 பேர் காயமடைந்தனர். ரத்தம் சொட்டச் சொட்ட ராஜீவைக் காண ஓடிவந்த அவர்களுக்கு உடனே சிகிச்சை அளிக்கும்படி அவர் உத்திரவிட்டார். பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர் மாரடைப்பால் மாண்டு போனார். கடைசியாக விமானம் ஏறும்போது கூட அவருடைய குடும்பத்துக்கு உதவும்படி பிரதமர் உத்திரவிட்டார்.



இவ்வளவு தூரம் தமிழ்நாட்டு உள் கிராமங்கள் வரை போய் மக்களைச் சந்தித்த முதல் பிரதமர் ராஜீவ்தானாம்! அதே போல எம்ஜி ஆருக்கு அடுத்து விடிய விடிய லட்சோப லட்சம் மக்கள் காத்திருந்து ராஜீவைத் தரிசித்தனராம்! சாலை நெடுகிலும் மக்கள் வெள்ளம். அதிலும் 80 சதவிகிதத்துக்கு மேல் பெண்களாம்! மக்களை நேரில் காண பிரதமர் பட்ட துன்பங்கள் ஏராளம், ஏராளமாம்!

300 கிலோ மீட்டர் தூரம். பல இடங்களில் திறந்த ஜீப்பை அவரே ஓட்டிச் சென்றார். பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. துணிச்சலுடன் நேரில் சென்று மக்களைச் சந்தித்தார். கொட்டும் மழையில் உடை சொட்டச்சொட்ட நனைந்தார். சேறு, சகதியில் நடந்து சென்று 'அரிசன' பெண்களைப் பார்த்தார். கொளுத்தும் வெய்யிலிலும் உண்ணாமல் உறங்காமல் விடிய விடியப் பயணம் செய்தார். அரண்மனைக்குறிச்சியிலே மக்களைக் காணச் சென்ற பிரதமர் ராஜீவ் சேற்றில் வழுக்கி விழப் பார்த்தார். தஞ்சையிலே காலை சிற்றுண்டி முடித்துக் கொண்டு புறப்பட்ட ராஜீவ் மாலை திருச்சி அடைக்கலராஜ் கொடுத்த விருந்தின் போதுதான் சாப்பிட்டார்.

இப்படி மக்களுக்காக அந்த கோமான் பட்ட துன்பங்களை அடுக்கிக் கொண்டே போகின்றன பத்திரிக்கைகள். 'அவருக்கென்ன தலைவிதியா! நேருவின் பேரன் கோடீஸ்வர கோமான்! ஆனாலும் ஏழை எளிய மக்களுக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார் பாருங்கள்!' என்கிற கருத்தை உருவாக்க நன்கு திட்டமிட்டு ஒத்திகை பார்த்து நடத்தப்பட்ட நாடகம்தான் இது!

### பாசிச ராஜீவின் ஒப்பனையும் நடிப்பும்

ஏழை எளிய மக்களைக் கவர்ந்தால் மட்டும் போதுமா. கலாச்சார-ஆன்மீக கூத்துக்கள் தவறாமல் ஒவ்வொரு ராஜீவ் பயணத்தின் போதும் உண்டு, சென்ற முறை பழனி தங்கத்தேர் இழுத்ததைப் போல.

இத்தாலிய பாசிஸ்டு முசோலினியின் அடிவருடியினுடைய மகள் சோனியாவுக்கு கௌரவமான தமிழகத்துக் குடும்பப் பெண் வேஷம் கட்டிவிட்டனர். நெற்றியிலே திலகம், கூந்தலிலே பூச்சரம், பட்டுச் சேலை! இந்திய பாசிஸ்டு ராஜீவுக்கு கும்பகோணத்து ஐயர் வேஷம் கட்டிவிட்டார்கள். வேட்டி, ஜிப்பா, அங்கவஸ்திரம், சந்தனக் குங்குமப் பொட்டு! எல்லாம் மணிசங்கர் ஐயரின் ஏற்பாடு.

'தமிழ்ப்' பண்பாடும், பக்தியும் சொட்டும் இந்தத் தம்பதிக்கு பூரண கும்பம்—பரிவட்டம் கட்டி வரவேற்றனர் சிதம்பரம் கோயில் குருக்கள். அதே போல வைத்தீஸ்வரன் கோவில், ஸ்ரீரங்கம்கோவில்களில் பார்ப்பனப் பண்டாரங்கள் செய்தனர், திராவிடப் பண்டாரம் திருவாவடுதுறை ஆதீனமும் தம் பங்குக்கு மரியாதை செலுத்தினார். வைத்தீஸ்வரன் கோவில் யானைக்குக் கரும்பூட்டி மகிழ்ந்த பிரதமருக்கு 4 அடி உயர வெள்ளிச் செங்கோல் அளித்தார்கள்.

இவர் மதச் சார்பற்ற பாசிஸ்ட் அல்லவா! எனவே இந்துக் கோவில்களுக்கு மட்டும் போகவில்லை. நாகூர் தர்காவுக்குப் போய் தொழுகை நடத்தினார். வேளாங்கன்னி மாதா கோவிலுக்


படிப்பகம்

www.padippakam.com

குப்போய்ஜபம்செய்தார். வரலாற்றுச்சிறப்புமிக்கசெஞ்சிக்கோட்டையை எலிக்காப்டரில் இருந்தபடியே பார்த்து பாரம்பரியப் பெருமையை நிலை நாட்டினார். ‘‘சகோதர, சகோதரிகளே!’’ என்று பொதுக் கூட்டங்களில் தமிழில் அழைத்துப் பேசினார். திருவாரூர்—திருவையாறு தியாகராஜர் நினைவு ஆலயங்களுக்கும் போய் கும்பிட்டார்.

### பாசிச ராஜீவின் வளர்ச்சிப் பணிகள்

வெறுமனே மக்கள் தொடர்பு பிரச்சார வேலைகள் மட்டுமல்ல பல வளர்ச்சிப் பணிகளையும் ராஜீவ் தொடங்கி வைத்தார். கருணாநிதியின் கண்ணொளி வழங்கும் திட்டத்திலிருந்து எம்ஜிஆரின் காலணி வழங்கும் திட்டம் வரை முன்னேறிய வளர்ச்சிப் பணிகளை காமராஜரின் காலனித் திட்டமாக ராஜீவ் உயர்த்தினார். இதற்காக அவர்கள் பாணியிலேயே பத்திரிக்கைகளில் முழுப் பக்க விளம்பரங்கள் தரப்பட்டன.

திண்டிவனம் சங்கனூரிலும் விழுப்புரத்திலும் காமராசர் ஆதி திராவிட வீடுகட்டும் திட்டக் காலனிகளையும் திருச்சி பச்சைப் பட்டியில் ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசன காலனியையும், தஞ்சை திருநள்ளாரிலும் கரூர் நாகனூரிலும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரிசன காலனியையும் திறந்து வைத்தார். எம்ஜிஆரின் சத்துணவுத் திட்டம் உட்பட அனைத்து மக்கள் நல திட்டங்களும் அப்படியே தொடரும் என்று உறுதி கூறினார்.

ஓட்டுப் பொறுக்க வரும்போது இப்படிச் சொல்லும் இதே பாசிச ராஜீவ்தான் கவர்ச்சித் திட்டங்களால் வளர்ச்சிக்கான நிதி விரயமடிக்கப்படுவதாக சென்னை மறைமலை நகர் மாநாட்டில் எதிர்க்கட்சிகளைச் சாடினார். ‘‘கடந்த இருபது ஆண்டுகளில் தமிழகம் பின்தங்கி விட்டதற்குக் காரணம் காங்கிரசு ஆட்சி இல்லாததுதான். கடந்த ஏழு மாதங்களில் திறமையான நிர்வாகத்தைக் கண்ட தமிழக மக்கள் காங்கிரசைத் தேர்ந்தெடுத்தால்தான் முன்னேற முடியும்’’ என்றார். சாதி அரசியலில் ஈடுபடுபவர்கள் மக்களுக்குத் தீங்கு செய்கிறார்கள் என்று கூறித்தாக்கினார். ‘தமிழக அரசியலின் தரம்தாழ்ந்து விட்டது; கீழ்த்தரமான அரசியல் ஏச்சுப் பேச்சுகளே நடக்கின்றன என்று வருந்தினார்’ என்று பத்திரிக்கைகள் கூறுகின்றன.

பரம யோக்கியனாக நடிக்கும் பாசிச ராஜீவின் ‘அகில இந்திய’ அசிங்கங்களை அறியாத அரசியல் மூடர்கள்தான் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்று கருதி



புளுகுகிறார். பாசிச ராஜீவ் கும்பல் ஆளும் பீகாரும், ஒரிசாவும், உத்திரப்பிரதேசமும், மத்தியப்பிரதேசமும் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிவிட்டதாக நம்புமளவு இங்கு யாரும் மூப்பனார்கள்—முட்டாள்கள் இல்லை. நேரு, காமராஜர் காலத்திலிருந்து பாசிச ராஜீவின் பாரம்பரியமே சாதி அரசியலின் அடிப்படையிலானதுதான் என்கிற இவர்களது பூர்வீக புராணத்தை அறியாத மூப்பனார்கள்—முட்டாள்கள் யாரும் இங்கு இல்லை. காந்தீய காங்கிரசாரின் ஆபாச வக்கிரக் கேளிக்கைகள் திராவிடக் கட்சிகளினுடையவற்றைவிட தரமானவை என்று எண்ணி ஏமாறும் மூப்பனார்கள்—முட்டாள்கள் யாரும் இங்கு இல்லை.

### பாசிச ராஜீவின் பகல் கனவு பலிக்காது

பாவங்களைக் கழுவக் கோவில்களுக்குப் போகும் ‘பிரபுக்கள்’ புண்ணியங்களைத் தேடிக் கொள்வதற்காக அங்கே வரிசையாக நிற்கும் பிச்சைக்காரர்களுக்கு தான தர்மம் செய்வதற்கு என்று மடியிலே சில்லரையைக் கட்டிக் கொண்டு போவார்கள். அப்படி ஓட்டுப் பொறுக்குவதற்கு வந்த பாசிச ராஜீவ் துண்டுத் துணிகளையும், ரூபாய் நோட்டுக்களையும் அள்ளிக் கொண்டு வந்து தமிழக ஏழை எளியவர்களிடம் அள்ளி வீசுகிறார். இது எம்ஜிஆர் பாணியிலே கொடை வள்ளல் பெயர் பெறுவதற்கான முயற்சி மட்டுமன்று; தமிழக மக்களையே அவமானப்படுத்துவதாகும். ஏனெனில் மற்ற மாநிலங்களுக்கும் சுற்றுப்பயணம் போகும் அவர் இதேபோல தானதர்மம் செய்வதில்லை.

இந்தச் சுற்றுப் பயணங்கள் மக்கள் மீது பாசிச கும்பலுக்கு ஏற்பட்டுள்ள கரிசனையால் வந்ததும் இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக மக்கள் மீது வராத கரிசனை இப்போது மட்டும் வந்திருப்பது ஏன்? ஓட்டுப் பொறுக்குவதற்காகத்தான். அப்புறம் இந்தக் கும்பல் இங்கே தலைவைத்தே படுக்காது. ஒரிசா, மத்தியபிரதேசம், பீகார், கேரளா, குஜராத் மாநிலங்களில் ‘அரிசன’ங்களையும் பழங்குடியினரையும் சந்திப்பதற்காக இப்படி சுற்றுப்பயணங்கள் போன பிரதமர் ராஜீவ் அந்த மக்களுக்கு என்ன செய்து கிழித்து விட்டார்? பரபரப்பு நடவடிக்கைகள் பத்திரிகைச் செய்திகள் ஆகியவற்றுக்குமேல் எதுவும் நடக்கவில்லை. பட்டினியால் மாண்டு கொண்டிருந்த ஒரிசாவின் கலகாந்தி, கோராபுட் மாவட்டங்களுக்குப் போய் உடனடி நிவாரணமளிக்கும்படி உத்திரவு போட்டார். கேரள மீனவர்களைப் பார்த்து உடனடியாக வீடுகட்டித் தரும்படி உத்திரவு போட்டார். எதுவுமே நடக்கவில்லை என்று மீண்டும் மீண்டும் அங்கிருந்து பத்திரிக்கைச் செய்திகள் வருகின்றன.

தமிழ்நாட்டு மக்களை சந்திப்பதற்காக அந்தக் கோமான் விட்டுச் சீமான் எவ்வளவு துன்பங்களையும் அனுபவிக்கிறார் என்று காட்ட முயலுகிறார்கள். மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து, சேறு சகதியில் நடந்து, உண்ணாமல் உறங்காமல் உழைக்கிறார் என்று பறையடிக்கிறார்கள். சும்மாவா? கோடி கோடியாகக் கொள்ளையடித்ததைக் காக்கவும், மேலும் கொள்ளையடிக்கவும் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் விதம் உல்லாசமாக செலவழித்து ஊதாரியாக வாழ வேண்டும். சாதாரண நீர் குடிக்க முடியாது. இமயமலைச் சாரலில் ஆயிரக்கணக்கான மீட்டர் ஆழத்தில் ஆழ்குழாய் கிணறு போட்டு குளிர்ந்த தாதுநீர் எடுத்து வந்து குடிக்க வேண்டும். மேலை நாட்டு படுக்கைகள், உடைகள், உணவுகள், மது வகைகள், சிகரெட்டுகள் வேண்டும். ஆட்டுக் கறியோ, மீன் கறியோ சேராது. அவற்றின் சினைக் கருவை எடுத்து வறுத்துச் சாப்பிட வேண்டும். ஆண்டு முழுவதும் இத்தனை வசதிகளைப் பெறுவதற்காக ஓரிரு நாட்கள் வேஷம் போட வேண்டியுள்ளது. என்ன செய்வது? நாய் வேஷம் போட்டால் குறைக்க வேண்டியுள்ளது. ஓட்டுப் பொறுக்கி வேஷம் போட்டால் இப்படி அலைய (!) வேண்டியுள்ளது.

எப்படியோ! இன்னொரு எம்ஜிஆர் உருவாவதற்கு மூப்பனாரும் சிதம்பரமும் முயலுகிறார்கள். அசலான எம்ஜிஆரின் ஆபாச, வக்கிர, லஞ்சஊழல், கோமாளி ஆட்சியின் அசிங்கங்களை அவரது கூட்டாளிகளே தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்லி வருகிறார்கள். இப்போது எம்ஜிஆரின் நரகலை வேறு இவர்கள் முதுகிலேற்றிக் கொள்ள வேண்டுமா?

● மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

# அடிமைப்பட்ட இனத்துக்கு அற்ப சலுகைகள்



கடந்த மூன்றாண்டு காலமாக நீடித்துவந்த கோர்க்கா மக்களின் போராட்டம் ஏறத்தாழ முடிவுக்கு வந்துவிட்டது. அமைதியையும் சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் முன்னேற்றத்தையும் நோக்கிய புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகள் ஏற்றிப் போற்ற, கூர்க்கா சமரச ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகக் காத்திருக்கிறது.

மத்திய உள்துறை அமைச்சர் பூடாசிங், மே.வங்க முதல்வர் ஜோதிபாசு, கோர்க்கா விடுதலை முன்னணியின் தலைவர் சுபாஸ் கெய்சிங் ஆகியோரைக் கொண்ட முத்தரப்பு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, கோர்க்கா தலைவர் தனிமாநிலக் கோரிக்கையைக் கைவிட்டு மாவட்ட கவுன்சில் கோரிக்கையுடன் சமரசத்திற்கு இறங்கி வந்துள்ளார். போலிக் கம்யூனிஸ்டுகளும் இக்கோரிக்கையை ஏற்று மே வங்க மாநில ஆட்சிக்குட்பட்ட டார்ஜிலிங் கோர்க்கா மலைமாவட்டக் கவுன்சிலை நிறுவ இசைந்துள்ளனர்.

தனிமாநிலக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய கோர்க்கா விடுதலை முன்னணித் தலைவர் கெய்சிங், மலை மாவட்டக் கவுன்சில் கோரிக்கைக்கு இறங்கி வந்திருப்பதற்கும், கோர்க்கா மக்களின் போராட்டத்தை தேச விரோதமானது, பிரிவினைவாத பிளவுவாதமானது, சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளால் தூண்டி விடப்படுவது என்று முத்திரை குத்தி ஒடுக்கிவந்த மே.வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு, இப்போது கெய்சிங்கை 'உற்ற நண்பராக' உச்சி முகர்வதற்கும் காரணம் இல்லாமலில்லை.

கோர்க்கா முன்னணித் தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் குழுச்சண்டையும் முற்றி இயக்கம் கெய்சிங்கின் கையை மீறிப் போய்க் கொண்டிருந்தது. குறிப்பாக பிரதான் தலைமையிலான தீவிரவாதப் பிரிவு வங்காளிகளை வெட்டிக்கொன்று உடல் உறுப்புகளை மரங்களில் தொங்கவிட்டு இனவெறியைப் பற்றியெரியச் செய்தபோது அதைக் கட்டுப்படுத்தும் திராணி கெய்சிங்கிடம் இல்லாமல் போயிற்று. இதோடு கெய்சிங் பிரிவுக்கும் பிரதான் பிரிவுக்கும் ஏற்பட்ட மோதலில் கோர்க்கா மக்களே பலியாயினர். இனியும் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றஞ்சி, தமது குட்டி முதலாளிய வர்க்கத் தன்மையால் கெய்சிங் தனி மாநிலக் கோரிக்கையைக் கைவிட்டு சமரசத்திற்குப் போக வேண்டியதாயிற்று.

மறுபுறம் போலிக் கம்யூனிஸ்டுக் கூட்டணியிலும் கோர்க்கா போராட்டத்தை ஒட்டி விரிசல் ஏற்படத் தொடங்கியது. வங்காளிகளைக் காக்கப் போவதாகக் கூறி இனவெறியைத் தூண்டி கோர்க்கா போராட்டத்தை ஒடுக்கி வந்த போலிகளால் கோர்க்காக்களின் இனவெறித்தாக்குதலிலிருந்து வங்காளிகளைக் காக்க முடியாமல் போயிற்று. எல்லாவற்றுக்கும் மேலாக கோர்க்கா பிரச்சினை தொடர்ந்து நீடித்தால் அடுத்து வரும் தேர்தலில் காங்கிரசு ஓட்டுப் பொறுக்க வாய்ப்பாக அமைந்து விடும் என்று போலிகள் அஞ்சினர். எனவேதான், தாங்களே சட்ட சபையில் இயற்றி, பின்னர் கிடப்பில் போட்ட டார்ஜிலிங் மலை மாவட்டக் கவுன்சில் தீர்மானத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு சமாதானத்துக்கு ஓடினர்.

ஒப்பந்தம் தயாராகி விட்டதாகவும், இன்னும் சிலிகுரி சமவெளி வட்டாரத்திலுள்ள சில பகுதிகளைச் சேர்ப்பது அல்லது நீக்குவது பற்றியே கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும் விரைவில் ஒப்பந்தம் சாதிக்கப்பட்டு விடுமென்றும் செய்திகள் வருகின்றன.

உருவாகப் போகும் இம்மலை மாவட்டக் கவுன்சில் டார்ஜிலிங் வட்டாரத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில் போக்குவரத்து, கல்வி, பொது மருத்துவம், சுற்றுலாத் துறை ஆகியவற்றை நிர்வகிக்கும் என்று முத்தரப்பு பேச்சுவார்த்தையில் முடிவாகியுள்ளதாக கூறப்படுகிறது.




ஒப்பந்தம் கையெழுத்தாகு முன்னரே உடனடியாக மத்திய ரிசர்வ் போலீசை இப்பகுதியிலிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும்; பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மாநில அரசு கைது செய்த போராளிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்; வரையறுக்கப்பட்ட விவகாரங்களில் இக்கவுன்சில் சுயேட்சையாக முடிவெடுத்து செயல்பட மத்திய அரசு சட்டரீதியாக உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்ற இறுதிக் கோரிக்கைகளை கெய்சிங் முன் வைத்துள்ளார்.

ஆனால் கோர்க்கா முன்னணியின் பிரதான் தலைமையிலான தீவிரவாதப் பிரிவு, தனிமாநிலக் கோரிக்கையைக் கைவிட்ட கெய்சிங்கின் அரைவேக்காட்டு—சமரச ஒப்பந்தத்தை ஏற்காமல் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதோடு மாணவர்—மகளிர் பிரிவும்கூட ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. பின்னர் தனி மாநிலத்தை அடைவதற்கு இது திறவுகோலாக இருக்கும் என்ற நப்பாசையில் அரைமனதுடன் ஏற்றுள்ளனர். அசாம்—மிஜோ ஒப்பந்தங்களைப் போல நாளை இதுமேலும் புதிய நெருக்கடிகளை உருவாக்கும். ஆடுகளை மோதவிட்டு ரத்தம் குடிக்கும் காங்கிரசு ஓநாய்களுக்கே இது சாதகமாக அமையும்.

பல்வேறு தேசிய இனங்கள் அடக்கியொடுக்கப்படும் ஒரு நாட்டில் தனியே ஒரு சிறுபான்மை இனம் மட்டும் சிறு சலுகைகளைப் பெற்று வளர்ச்சியடைவது ஒருபோதும் சாத்தியமில்லை. தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை பெறுவதும் சிறுபான்மை இனங்கள் சுயாட்சி உரிமை பெறுவதும் அனைத்து இனங்களும் ஜனநாயக ரீதியில் பரஸ்பரம் ஐக்கியப்படுவதும்தான் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கும். அதை பாட்டாளிவர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சி மட்டுமே சாதிக்க முடியும்!

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவின் புதிய ஊழல்கள்

சமூக விரோதி 'ஆட்டோ' சங்கரின் பங்களாவைத் தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள் வந்தது போல, ராஜீவ் அரசின் வெளிநாட்டு ஆயுத பேர, வணிக ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றையும் நோண்ட நோண்ட லஞ்ச ஊழல்களாக வெளிவந்து நாறுகின்றன. அண்மை உதாரணங்கள் இரண்டு: ஒன்று, எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷனிடமிருந்து ஆர்டர் ஒன்றைப் பெற ஜப்பானிய கம்பனி கொடுத்தகையூட்டு; இரண்டு, இங்கிலாந்து நாட்டு வெஸ்ட்லேண்டுகம்பனியின்ஹெலிகாப்டர்கள் வாங்கியதில் முறைகேடுகள்.

எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷனுக்காக ஹெச்.பி.ஜே.பைப்கள் பதிப்பதற்காக ஒப்பந்தம் செய்துள்ளது சுமிடோமோ என்ற ஜப்பான் கம்பனி; இந்த பைப்புகளை பதிப்பது தொடர்பாக தனக்கு 'ஆலோசனை' வழங்கியதற்காக 6.5 கோடி ருபாய்களை 'ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸ்' என்ற இந்திய கம்பனிக்கு கொடுத்ததாக சுமிடோமோ நிறுவனம் சொல்கிறது. உண்மையில், இரு பெண்களால் நடத்தப்படும் ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸ் கம்பனிக்கு எண்ணெய் மற்றும் பைப்புகள் துறையில் எவ்வித முன் அனுபவமும் கிடையாது.

விஷயம் என்னவென்றால், பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட 'எல்.ஜே. கன்சல்டன்ட்ஸ் இன்கார்ப்பரேட்' என்ற கம்பனிக்கு இலண்டனில் உள்ள வங்கி கணக்கில் முதலில் பணம் செலுத்தப்பட்டு, பின்னர் அது 'ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸ்' கம்பனிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பனாமா, இலண்டன் ஆகிய நாடுகளில் உள்ள பினாமி கம்பனிகள் மூலம் தான் போபார்ஸ் ஊழல் பணத்தை பாசிச ராஜீவ் கும்பல் பெற்றது என்பதை நினைவில் கொள்ளும் போது எல்லாம் தெளிவாகி விடுகிறது. எண்ணெய் மற்றும்எரிவாயுக் கமிஷனிடமிருந்து ஆர்டர் பெற கையூட்டாக கொடுக்கப்பட்டது தான் இந்தப் பணம் என்பதுபளிச்சென தெரிந்துவிடுகிறது;

ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸ், தான் பெற்ற வருமானத்தை மறைத்துவிட்டது; விஷயம் நோண்டப்படுவதை அறிந்து, 13 மாதங்களுக்குப் பிறகுதான் கணக்கு காட்டியது; ஆனால் வருமான வரித்துறை இதற்காக அபராதமோ, வட்டியோவிதிக்கவில்லை. உலக அதிசயமாக ஐந்தே நாட்களில் இந்தவிவகாரத்தை வருமான வரித்துறை பைசல் செய்துவிட்டது. காரணம் மேலிடத்து உத்தரவுதான்! வேறு எந்த கம்பனியுடனும் சுமிடோமோ ஏற்பாடுகள் செய்துகொள்ளக்கூடாது; ஆலோசகர்களை அமர்த்திக் கொள்ளக் கூடாது என்பது எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷன் விதித்திருந்த நிபந்தனையாகும். ஆனால் ஒப்பந்தம் போடும்போதே சுமிடோமோ கம்பனி ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸை ஆலோசகராக அமர்த்தியிருக்கிறது; எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷனிடமிருந்து ஆர்டர் பெற இடைத்தரகனாக—ஆலோசகராக செயல்படவே ஜோத்ஸ்னா ஹோல்டிங்ஸ் அமர்த்தப்பட்டிருக்கிறது என்பது இதன் மூலம் நிருபணமாகிறது.


ஜோத்ஸ்னா கம்பனியின் உரிமையாளர்களில் ஒருவரின் கணவரான லலித் சூரி என்பவர் பிரதமரின் வீட்டிற்கு சர்வ சாதாரணமாக சென்று வரக்கூடிய அளவிற்கு செல்வாக்கு பெற்றவர். புதுடெல்லி மாநகராட்சியின் விதிகளை அப்பட்டமாக மீறி 'உலக வணிக மையம்' என்ற கட்டிடத்தை சூரி உருவாக்கியுள்ளார். இது எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷனுக்கு பின்னர் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இரசியாவிற்கு அரிசி ஏற்றுமதி செய்வதில், ஒரு இலட்சம் டன் தரங்குறைந்த அரிசியை ஏற்றுமதி செய்த ஊழலில் ஏற்கனவே சூரி சிக்கியுள்ளார்.

இந்த விவரங்கள் எல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும் போது, பாசிச ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல் பினாமிகளில் ஒருவர் தான் சூரி என்பது தெள்ளத் தெளிவாக நிருபணமாகின்றது. இந்துஜா போல, அமிதாப்பச்சன் போல, வின் சாதா போல சூரியும் ஒருவர்.

எண்ணெய் மற்றும் எரிவாயுக் கமிஷனின் பயன்பாட்டுக்கென்றும் மிக மிக முக்கிய புள்ளிகளின் உபயோகத்திற்கென்றும் மொத்தம் 18 ஹெலிகாப்டர்களை வாங்குவதென அரசியல் விவகார அமைச்சரவைக் கமிட்டி 1982 ஆகஸ்டில் ஒரு முடிவை எடுத்திருந்தது ஜூன் 1983க்குள் எண்ணிக்கை27க்கு உயர்த்தப்பட்டது. நான்கு வகை ஹெலிகாப்டர்கள் பரிசீலிக்கப்பட்டன. எக்காரணம் கொண்டும் தரங்குறைந்த இங்கிலாந்து நாட்டின் வெஸ்ட்லேண்டு ஹெலிகாப்டர்களை வாங்கக்கூடாதென்று செயலாளர்களின் கமிட்டி முடிவெடுத்திருந்தது.

புதிதாக பதவியேற்ற ராஜீவ் அரசாங்கம் எடுத்த ஒரு முக்கியமான முதல் முடிவு, ஹெலிகாப்டர் வாரியம் ஒன்று அமைப்பது பற்றி கேப்டன் சாதா என்பவர் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்ததாகும். இந்த சமயத்தில்தான், வெஸ்ட்லேண்டு கம்பனியும் வெஸ்ட்லேண்டு ஹெலிகாப்டர்களுக்கு எஞ்சின்கள் சப்ளை செய்யும் ரோல்ஸ்ராய் கம்பனியும்குறுக்கிட்டனர்; விற்காமல் தேங்கிக் கிடந்த தமது ஓட்டை ஹெலிகாப்டர்களை இந்தியாவின் தலையில் கட்ட இங்கிலாந்து பிரதமர் மார்க்கரெட் தாட்சர் மூலம் ராஜீவ் காந்தியை தொடர்பு கொண்டனர்.

ஆனால் பாதுகாப்பற்ற, பராமரிப்பு செலவு அதிகம் பிடிக்கும், வெஸ்ட்லேண்டு ஹெலிகாப்டர்களை வாங்கக்கூடாது என்பதில் அரசாங்கத்தின் அனைத்து கமிட்டிகளும் தொழில்நுட்ப வல்லுனர்களும் உறுதியாக இருந்தனர். செயலாளர்களின் கமிட்டியிடமிருந்துதான் முதன் முதலில் எதிர்ப்பு வந்தது. அடுத்து, பாதுகாப்புத் துறை செயலாளரை தலைவராகக் கொண்ட கமிட்டியும் வெஸ்ட்லேண்டு ஹெலிகாப்டர்களை நிராகரித்துவிட்டது. அதன் பின் அமைக்கப்பட்ட ஏர் மார்ஷல் கிரீன் கமிட்டியும் நிராகரித்துவிட்டது. இறுதியாக, 1986ம் ஆண்டு எலிகாப்டர்கள் வாங்கும் திட்டத்தை இறுதியாக்கிய பொது முதலீட்டு வாரியமும் வெஸ்ட்லேண்டு ரக எலிகாப்டர்களை வாங்கக் கூடாது என்றே பரிந்துரைத்தது. இத்தனை எதிர்ப்புகளுக்குப் பின்னும் இந்திய அரசாங்கம் W—30






படிப்பகம்

ரக வெஸ்ட்லேண்டு எலிகாப்டர்களில் 21—ஐ 1986ல் வாங்கியது.

வெஸ்ட்லேண்டு கம்பனியில் விற்காமல் கடைசியாக தேங்கியிருந்தவைதான் இந்த 21 எலிகாப்டர்கள். இந்த விற்பனை நடந்தால் வெஸ்ட்லேண்டு கம்பனியை வாங்கிக் கொள்வதாக ஆகஸ்டா என்ற இத்தாலிய கம்பனியும் சிகோர்ஸ்கி என்ற அமெரிக்க கம்பனியும் அறிவித்து அவ்வாறே வாங்கவும் செய்தன. வெஸ்ட்லேண்டு எலிகாப்டர்களை வாங்குவதாக இருந்தால் ஏறத்தாழ ரூ. 140 கோடி (6.5 கோடி பவுண்டுகள்) கடன் தருவதாக இங்கிலாந்து அரசாங்கமும் தெரிவித்து, ராஜீவை நிர்பந்தப்படுத்தி வந்தது.

இந்த பின்னணியில்தான், எலிகாப்டர்கள் வாங்குவது தொடர்பாக புதிதாக ஒரு கமிட்டியை ராஜீவ் அரசாங்கம் அமைத்தது. இந்தக் கமிட்டியின் உறுப்பினர்களைத் தீர்மானிப்பதில் ராஜீவ் காந்தி தனிப்பட்ட முறையில் பிரத்தியேக அக்கறை எடுத்துக் கொண்டார். ராஜீவ் காந்தியின் விசுவாசிகளைக் கொண்ட அக் கமிட்டி எதிர்பார்த்த மாதிரியே வெஸ்ட்லேண்டு ஹெலிகாப்டர்களையே பரிந்துரைத்தது. அதன் பின்னர் அரசாங்கம் வேகமாக செயல்பட்டது. ஓட்டை எலிகாப்டர்கள் இந்தியாவிற்கு தள்ளிவிடப்பட்டன.

இவ்வாறு வாங்கப்பட்ட எலிகாப்டர்கள் பவன் ஹன்ஸ் என்ற இந்திய நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது. எஞ்சினில் எவ்வித கோளாறும் இல்லாமல் சராசரி 1000 மணி நேரம் இந்த எலிகாப்டர்கள் பறக்கும் என வெஸ்ட்லேண்டு கம்பனி உறுதி கூறியிருந்தது. ஆனால் சராசரி 147 மணி நேரம் பறந்தாலே எஞ்சின்கள் ரிப்பேர் ஆகிவிடுகின்றன. எப்பொழுதும் 5, 6, எலிகாப்டர்கள் ரிப்பேர் என்ற நிலையில் நின்று கொண்டிருக்கின்றன. உதிரி பாகங்களோ கிடைப்பதில்லை. ஏனென்றால், இந்த மட்டரக எலிகாப்டர்கள் தயாரிப்பதை வெஸ்ட்லேண்டு நிறுத்திவிட்டதால் உதிரி பாகங்களையும் அது தயாரிக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த எலிகாப்டர்களை பராமரிப்பதற்காக வெஸ்ட்லேண்டு கம்பனி ஒரு மணி நேரம் பறப்பதற்கு ரூ. 12,000 (570 பவுண்டுகள்) வசூலிக்கிறது. ஆனால் ஏற்கனவே ஒப்புக் கொண்டதோ ரூ. 7000 மட்டுமே.

மேலும், வெஸ்ட்லேண்டு எலிகாப்டர் ஒன்றின் விலை முதலில் 16.4 இலட்சம் பவுண்டுகளுக்கு விலை பேசப்பட்டு இறுதியில் 22. 7 இலட்சம் பவுண்டுகளுக்கு வாங்கப்பட்டது. ஆனால் வல்லு




னர்களின் கமிட்டிகளால் பரிந்துரைக்கப்பட்ட பிரஞ்சு எலிகாப்டரான டௌபின்ஸ் ஒன்றின் விலை 17 இலட்சம் பவுண்டுகள்தான். 'குதிரை விலை கால் பணம், திங்கிற கொள்ளு முக்கால் பணம்' என்று சொல்வது போல, இந்த எலிகாப்டர்கள் பராமரிப்பு செலவு என்ற பெயரில் பணத்தைக் குடிக்கின்றன. ஆனால் இதற்காக வெஸ்ட்லேண்டு கம்பெனியிடம் நட்ட ஈடு கோர முடியாது. காரணம் வெஸ்ட்லேண்டு கம்பனியுடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தம் அக் கம்பனிக்கு மிகவும் சாதகமாக உள்ளது. போபார்ஸ் கம்பனியுடன் போடப்பட்ட ஒப்பந்தமும் இப்படிப்பட்ட தன்மை கொண்டதுதான் என்பதையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே, இந்த ஒப்பந்தத்திற்கு பின்னால், ராஜீவ் கும்பலின் இரகசிய பேரம், இரகசிய கம்பனிகள், இரகசிய வங்கி கணக்குகள் நிச்சயமாக இருக்கும். ஆனால்




அது இன்னும் வெளிப்படை ஆகவில்லை. எனினும், போபார்ஸ் விவகாரத்தில் இடைத் தரகனாக செயல்பட்ட ஏ.ஈ. கார்ப்பரேஷன் என்ற இலண்டன் கம்பனி ஹெலிகாப்டர் ஊழலிலும் சம்பந்தப்பட்டிருக்கிறது என அடிபடுகிறது அமிதாப், இந்துஜா, வின் சாதா சதீஷ் சர்மா, சூரி போன்று இதற்குப் பின்னாலுள்ள ராஜீவின் பினாமியும் ஒரு நாள் வெளிப்படுவான்.

இந்த இரண்டு ஊழல்களுடன் போபார்ஸ், பீரங்கி, நீர்மூழ்கி கப்பல் பேர ஊழல்களில் புதுப்புது தகவல்கள் வந்து ராஜீவின் உறக்கத்தை சிதறடித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் மேலும் அம்பலமாகி, நாறிக் கொண்டிருக்கும் தனது மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பாசிச ராஜீவ் கும்பல் புதுக்கரடிகளை அவிழ்த்துவிட்டு அனுதாபத்தைப் பெற முயல்கிறது.

மூன்று மாதங்களுக்கு முன் பொற்கோயில் மீது எடுத்த "கருப்பு இடி நடிவடிக்கை"யின் போது கிடைத்த ஆவணங்களில் இருந்து ராஜீவ் காந்தியையும் பூட்டாசிங்கையும் கொல்வதற்கு பஞ்சாப் தீவிரவாதிகளைப் பயன்படுத்தி பாகிஸ்தான் போட்ட திட்டம் இப்போது அம்பலமாகியுள்ளது என்றும், இதற்குப் பின்னால் சர்வதேச ஆதரவும் பின்னணியும் உள்ளது என்றும் பரபரப்பாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவிலிருந்து பாகிஸ்தான் நவீன விமானங்களை வாங்கியுள்ளது என்பதை மிகைப்படுத்தி நாட்டிற்கு ஆபத்து என்று பாசிச ராஜீவ் கும்பல் கூக்குரலிட்டது. பாகிஸ்தானிடம் அணுகுண்டுகள் இருப்பதாக அமெரிக்க பத்திரிகையே செய்தி வெளியிட்டுள்ளது என்று ஒரு 'பீதி'யைக் கிளப்பியது.

ஆனால் அதே பத்திரிகையில் பாகிஸ்தானைவிட அதிகமாக இந்தியாவிடம் அணுகுண்டுகள் இருப்பதாக வந்த செய்தியை இருட்டடிப்பு செய்து விட்டது. இவ்வாறு புதுப்புது ஊழல்கள் அம்பலமாகும் போதெல்லாம் தனக்கு ஆபத்தென்று அனுதாபத்தை தேடியும் நாட்டிற்கு ஆபத்தென்று தேசிய வெறியைத் தூண்டியும் தனது லஞ்ச லாவண்யங்களை மறைத்துவிடலாம் என பகல் கனவு காண்கிறது பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் பரந்துபட்ட மக்கள் பாசிச ராஜீவ் கும்பலின் முகத்தில் பளாரென்று அறைந்து தலைமுடியைப் பிடித்து இழுத்து வந்து மக்கள் மன்றத்தில் வைத்து தண்டிக்கும் ஒரு நாள் வந்தே தீரும்.

● பாலன்

www.padippakam.com



# மீண்டும் ராஜீவ் வருகை! தோழர்கள் கைது!

ஊர் சுற்றி, உல்லாச ஊதாரிப் பேர்வழி, பீரங்கித் திருடன், ஈழ ஆக்கிரமிப்பாளன், பாசிச தவப் புதல்வன் ராஜீவ், ஓட்டுக்களைக் குறி வைத்து அடிக்கடி தமிழகம் வருவதும் அதையொட்டி ஆயிரக் கணக்கில் அப்பாவி மக்களும் புரட்சியாளர்களும் கைது செய்யப் படுவதும் வாடிக்கையாகிவிட்டது.

31.7.88 அன்று நள்ளிரவு திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழகச் செயலாளர் தோழர் முத்துவும் மற்றொரு தோழர் முத்துவும் பாசிச ராஜீவ் வருகையையொட்டி கைது செய்யப் பட்டனர். அதே நேரத்தில் திருச்சி—உறையூர் எஸ்.ஐ. ஆதி நாராயணன் தலைமையில் வந்த மற்றுமொரு போலீஸ் பட்டாளம் கபிலன், ரவி, அருண், குமார் முருகன் ஆகிய ஐந்து தோழர்களைக் கைது செய்து 15 நாள் காவலில் திருச்சி மத்திய சிறையில் அடைத்துள்ளது.

ராஜீவ் வரும்போது எதிர்ப்பு தெரிவித்து பொது மக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் சதித் திட்டம் தீட்டியதாகபொய் வழக்கு போடப்பட்டுள்ளது.

8.8.88 அன்று காலைதிருவையாறு ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பாளர் தோழர் ஜெயசீலன் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ளார்.

ஆனால் இந்த அச்சுறுத்தல்களுக்கு புரட்சிகர அமைப்புகள் என்றுமே அடிபணிந்ததில்லை; பணியப்போவதுமில்லை. மாறாக, முன்னணிலும் புதிய உற்சாகத்துடன் பாசிசக் கோமானை 'வரவேற்றனர்'!

''பீரங்கித் திருடன் ராஜீவே திரும்பிப் போ! ஈழ ஆக்கிரமிப்பாளன் ராஜீவே திரும்பிப் போ! ஏழை இந்தியனின்வரிப்பணத்தில் ஊர் சுற்றும் உல்லாசியே திரும்பிப் போ!

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க வக்கற்ற அக்கறையற்ற ராஜீவே, தஞ்சை சுற்றுப் பயணம் உனக்கு ஒரு கேடா!

நடக்காது ஜம்பம் பலிக்காது உன் தேர்தல் 'ஸ்டண்டு' ஜெயிக்காது! கைது செய்யப்பட்ட தோழர்களை உடனே விடுதலை செய்!''—என்ற முழக்கங்களுடன் திருவையாறு ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி சுவரொட்டி இயக்கம் நடத்தியது.

''ஈழத்துக் கொலைகாரன், பீரங்கித் திருடன் ராஜீவே திரும்பி போ! கைதான தோழர்களை களை உடனே விடுதலை செய்!'' என்ற முழக்கங்களுடன் திருச்சிமக்கள் கலை இலக்கியக் கழகம் சுவரொட்டி இயக்கம் நடத்தியது.

''ஈழத்தில் நடப்பதோ தமிழினப் படுகொலை! இந்தியாவில் நடப்பதோ பட்டினிப்படுகொலை! பீரங்கித் திருடன் ராஜீவ் வடலூர் வருகை; உழைக்கும் மக்களே உஷார், உஷார்!'' என்ற முழக்கங்களுடன் வடலூர்—நெய்வேலி பகுதியைச் சேர்ந்த புதிய கலாச்சார வாசகர் வட்டத் தோழர்கள் சுவரொட்டி இயக்கம் நடத்தினர்.

பாசிசப் பிரதமரின்வருகையையொட்டி தமிழக எதிர்க்கட்சிகள் எதுவும் செய்யாத நிலையில், உரிய 'மரியாதையுடன்' பாசிஸ்டை இனங்காட்டிய புரட்சிகர அமைப்புகளின் செயல்பாட்டை பகுதிவாழ் மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். ●


படியுங்கள்!

## புதிய ஜனநாயகம் வெளியீடுகள்



**தோழர் மாசேதுங் மேற்கோள்கள்**

விலை ரூ: 12
தபால் செலவு ரூ: 4

**சுசி (SUCI)**
—இரவல் கம்யூனிசப் போர்வையில் இன்னுமொரு குட்டி முதலாளித்துவ கும்பல்

விலை ரூ: 2
தபால் செலவு ரூ: 1

**கட்சி நிறுவனக்கோட்பாடுகள்**

விலை ரூ: 4
தபால் செலவு ரூ: 1

### பிற வெளியீடுகள்

**விவசாயிகள் விடுதலை முன்னணியின் கொள்கை அறிக்கை**

விலை ரூ: 2
தபால் செலவு: 1

**காந்தியும்—காங்கிரசும் —ஒரு துரோக வரலாறு**

விலை ரூ: 1-50
தபால் செலவு ரூ: 1

**மக்கள் கலை இலக்கியக்கழகத்தின் கொள்கை அறிக்கை**

விலை ரூ: 2
தபால் செலவு: ரூ. 1

**காலனி மக்களின் விடுதலைப் போராட்டம்**

விலை ரூ: 2
தபால்செலவு: ரூ 1

நூல்களைத் தபாலில் பெற விரும்புவோர் தபால் செலவுடன் சேர்த்து அத்தொகைக்கேற்ப தபால் தலைகளை (STAMPS) அனுப்புக.




படிப்பகம்

www.padippakam.com

# அரசு பயங்கரவாதியின் பொறுக்கித்தனம்!

அதிகார வர்க்க—போலீசு—ராணுவ கும்பலின் கலாச்சாரமே அலாதியானது. குடி கூத்து கும்மாளம் என்று சாக்கடையில் மூழ்கி முத்தெடுக்கும் இழிபிறவிகள் அவர்கள். அவர்களின் காமக் களிவெறியாட்ட கூத்துகள் பெரும்பாலும் வெளியே வருவதில்லை. வந்தாலும் அவை பரவி விடாதபடி அமுக்கிவிடுவதிலேயே அவர்கள் குறியாய் இருப்பார்கள்.

பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதத்தின் முதுகெலும்பை முறிக்கப் போவதாக மார்தட்டிக் கொண்ட ரிபைரோவுக்குப் பிறகு இப்போது டிஜிபியாக அதிகாரத்திலிருப்பவர் கே.பி.எஸ்.கில். பயங்கர வாதத்தை ஒழிக்கப்புறப்பட்ட இந்த கிழட்டுப் புலியின் காமக் களிவெறியாட்ட கூத்துகள் இப்போது அம்பலமாகி சந்தி சிரிக்கத் தொடங்கி விட்டது.

பஞ்சாப் மாநில நிதித்துறை கமிஷனரான கபூர் வீட்டில் ஜுலை 18ந் தேதியன்று இரவு ஒரு விருந்து நடந்தது. பஞ்சாபின் சூரப்புலி டிஜிபி கில், மற்றும் பிற ஐஏஎஸ், ஐபிஎஸ் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர். விருந்து முடிந்ததும் பெண் அதிகாரிகள் ஒரு புறமும், ஆண் அதிகாரிகள் ஒரு புறமுமாக மகிழ்ச்சியும் கேளிக்கையுமாக அளவளாவிக் கொண்டிருந்தனர்.

மேல்மட்ட அதிகாரிகள் பங்கேற்கும் விருந்தாயிற்றே! வழக்கம் போலவே சீமைச் சாராயம் வெள்ளமாக ஓடியது. போதை தலைக்கேறிய கில், பெண்கள் குழுமியிருந்த பக்கம் போய், அவர்கள் அருகே அமர்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் அவரது ஆபாச சேட்டைகளைச் சகிக்க முடியாமல் பெண்கள் மெதுவாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

அங்கே ரூபன் தியோல் என்ற நிதித்துறை சிறப்புச் செயலாளரான பெண் அதிகாரியும் இருந்தார். உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டுமென கில் அவரை அழைத்தார். மாநிலத்தின் உயர் அதிகாரப் பொறுப்பில் இருப்பவராயிற்றே என்று அவரும் எழுந்து வர, கில் நாற்காலியை தனக்கருகே போட்டுக் கொண்டு அமரச் சொன்னார். இந்த அருவருப்பான செய்கையால் எரிச்சலடைந்த தியோல் மீண்டும் தனது இருக்கைக்கே சென்று அமர்ந்து கொண்டார்.

சில நிமிடங்களில் கில்எழுந்து வந்து தியோல் எதிரே நின்று கொண்டு 'என்பின்னேவா' என்று அதிகார மிடுக்குடன் உத்திரவு போட்டார். அரண்டு போன தியோல் எழுந்து நழுவமுயற்சித்த போது, அவரது சேலையை பிடித்து இழுத்து பிட்டத்தில் தட்டினார். இந்த ஆபாசக் கூத்து எல்லா பெரிய அதிகாரிகள் முன்னிலையில் நடந்தது. அவமானத்தால் கூனிக் குறுகிப்போன தியோல் அவசரமாக வெளியேறி விட்டார். அவரைப் பின் தொடர்ந்த கில்லை மற்றவர்கள் பிடித்து இழுத்து செல்ல வேண்டியதாயிற்று.

இந்த அயோக்கியத் தனமான செயலுக்காக கில்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்த்த தியோல் ஏமாந்தார். அடுத்த சில நாட்களில் கில் மீது போலீசில் புகார் செய்தார். பெண்களை சொல்லாலும், செயலாலும் மான பங்கப்படுத்தும் கீழ்த்தரமான செயலுக்காக நடவடிக்கை எடுக்கக் கோரும் விதிகளின் கீழ் புகாரைப் பதிவு செய்துள்ளார்.

விவகாரம் வீதிக்கு வந்து விட்டதைக் கண்டு அரண்டு போன கவர்னர் ரே, கில் தன்னிடம் மன்னிப்பு கேட்டு விட்டதாகவும், விவகாரத்தைப் பெரிது படுத்த வேண்டாம் என்றும் தியோலிடம் கெஞ்சுகிறார். கவர்னரின் ஆலோசகரும் முன்னாள் சூரப்புலியுமான ரிபைரோ, தன் முன்னிலையில் கில்லை மன்னிப்பு கேட்கச் செய்வதாகக் கூறி தியோலிடம் சமரசம் பேசுகிறார்.

ஆனால் தியோல் எதற்கும் வளைந்து கொடுப்பதாக இல்லை. இப்போது ஏராளமான மகளிர் அமைப்புகளும் தியோலுக்கு ஆதரவாகத் திரள்கின்றன. 'குடி போதைக்கு அடிமையான பெண் பித்துப் பிடித்த ஒரு போலீசு அதிகாரியால் பயங்கரவாதத்தை ஒழிப்பது ஒருக்காலும் சாத்தியமில்லை. அவரை உடனடியாக மாற்ற வேண்டும்' என்று பஞ்சாபிலுள்ள அனைத்து கட்சிகளும் கில்லுக்கு எதிராகத் திரும்பியுள்ளன.

மதவெறி பயங்கரவாதத்தை ஒழிக்கப் புறப்பட்டுள்ள அரசு பயங்கரவாதிகளின் லட்சணம் இதுதான். வேறு சாதாரணப் பெண்ணாக இருந்திருந்தால் இந் நேரம் விவகாரத்தை அமுக்கி, சுட்டுக் கொன்றுவிட்டு சீக்கிய பயங்கரவாதிகளின் தாக்குதல் என்று கதை கட்டியிருப்பார்கள். ஆனால் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவரே இப்போது அம்பலப் படுத்தியதும் விழிபிதுங்கிநிற்கிறார்கள்.

'குடி போதைக்கு அடிமையான பெண் பித்துப் பிடித்த டிஜிபி கே.பி.எஸ்.கில். எதற்கும் வளைந்து கொடுக்காத தியோல்





படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றைப் புரட்டுவதும்
தேசதுரோகத்தையே தேசபக்தி என சித்தரிப்பதும்
காங்கிரசின் கலாச்சாரம்.

# ‘வெள்ளையனே வெளியேறு’ நாடகமும் காங்கிரசின் வேசித்தனமும்

‘வெள்ளையனே வெளியேறு!’ என ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முழக்கமிட்டு ‘செய் அல்லது செத்து மடி’ என தீரமிக்க ஒரு போராட்டத்தை இந்தியாவின் சுதந்திரத்திற்காக காந்தி நடத்தினாராம்! கதை விட்டு வருகின்றனர் காங்கிரஸ்காரர்கள். காந்தி விடுத்த அறைகூவலின்படி போராட்டத்தில் ஈடுபட்ட ‘ஆகஸ்டு தியாகிகள்’ என்று தம்மைத் தாமே பீற்றிக் கொள்கின்றனர் காங்கிரஸ்காரர்கள். அதற்கு இப்போது நினைவு நாள் கொண்டாடுகிறார்களாம் தமிழக காங்கிரஸ்காரர்கள்.

வரலாற்றைப் புரட்டுவதும் தேசதுரோகத்தையே தேசபக்தி என சித்தரிப்பதும் தான் காங்கிரசின் கலாச்சாரம். இந்திய திருநாட்டின் விடுதலை தான் நோக்கம் என்பது திட்டமிட்டபொய்யே. ‘வெள்ளையேனே வெளியேறு!’ என்ற தீர்மானத்தை காந்தியும் காங்கிரசும் போட்ட பின்னணியே வேறு.

1939-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதியன்று இட்லர் போலந்தையும் இங்கிலாந்தையும் தாக்கினான். உடனேபிரான்சு ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தது. இவ்வாறு இரண்டாவது உலக யுத்தம் மூண்டது.

போர் தொடுக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள் ஆங்கிலேய வைசிராய் இந்தியா, “போரிலுள்ள ஒரு நாடு” என அறிவித்தார். யுத்த செலவிற்காக புதிய செலவிற்காக புதிய வரிகளைப் போட்டு இந்தியமக்களை கசக்கிப் பிழிய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தயாரானது. தனது இராணுவ பீரங்கிக்குத் தீனி போட இந்தியர்களை தீவிரமாக பட்டாளத்தில் சேர்க்க ஆரம்பித்தது. எதிர்த்துப் போராடுபவர்களை ஒடுக்க அவசரச் சட்டங்களைப் போட்டு அடக்குமுறையை ஏவிவிட தன்னை தயார்படுத்திக் கொண்டது; ஒவ்வொரு எதிர்ப்பையும் நசுக்கியது. ஒடுக்குமுறையை மட்டுமேநம்பியிருக்காமல் போருக்குப் பின்அரசியலதிகாரத்தை இந்தியர்களின் கைக்கே மாற்றி விடுவது என்ற மாயையை ஏற்படுத்தும் பொருட்டு கிரிப்ஸ் கமிஷன் போன்ற தூதுக்குழுக்கள் மூலம் அரசியல் மோசடி மூட்டைகளை அவிழ்த்து விட்டது.

ஜெர்மன்—ஜப்பான் முகாம் ஒரு பக்கமும், இங்கிலாந்து—பிரான்சு மற்றொரு பக்கமுமாக நின்று நாசகார யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இந்த இரண்டு ஏகாதிபத்திய முகாம்களும் ஒன்றின் காலனிகளை இன்னொன்று அபகரிக்க நடத்திய யுத்தம்தான் அது. எனவே, அது உலக மக்களுக்கு எதிரான அநீதியான யுத்தமாகும். இந்த யுத்தத்தில், இரண்டு முகாம்களையும் எதிர்த்து முறியடிக்க வேண்டியதே ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமையாகும். நம்மை அடிமைப் படுத்தியிருந்த இங்கிலாந்து அநியாய யுத்தத்தில் சிக்கிக் கொண்டிருந்த நேரம். அதனால் இந்தியா மீது தனது ஆதிக்கத்தை செலுத்துவதில் பலவீனப்பட்டிருந்த நேரம். எனவே, இந்தியா தனது சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் வாய்ப்பான நேரம். இந்தியாவின் சுதந்திரத்தை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து பறித்தெடுக்க விரும்பும் எந்த தேசபக்த இந்தியனும் இவ்வாறு தான் எண்ணுவான். யுத்தத்திற்கும் காலனிய ஆட்சிக்கும் எதிராக போர்ப் பிரகடனம் செய்து சுதந்திரத்திற்கான போராட்டத்தைத் தீவிரமாக்குவான்.

ஆனால் காந்தியும்காங்கிரசும் மக்களைத் திரட்டி சுதந்திரத்திற்கான போராட்டத்தை நடத்தவில்லை. மாறாக, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு தருவதாக காந்தி, நேரு, ஜின்னா ஆகியோர் தனித்தனியாக விடுத்த அறிக்கைகளில் உறுதிகூறினர். 1939, செப்டம்பர் 5-ல் வைசிராயை சந்தித்த காந்தி தனது முழு அனுதாபமும் ஆங்கிலேய ஆட்சிக்கு உண்டு எனச் சொன்னார். அந்த சந்திப்பின் போது, “நான் அவருக்கு (வைசிராய்க்கு) இங்கிலாந்து பாராளுமன்றமும் அமைச்சரவைத் தலைமையகமும் யுத்தத்தால் அழியக்கூடிய வாய்ப்பு பற்றிய சித்திரத்தை விளக்கியபோது கண்கலங்கிப் போனேன்” என்று காந்தி எழுதினார். “இங்கிலாந்து ஜீவமரண போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அதை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவது இந்தியாவின் கௌரவத்திற்கே இழிவு ஏற்படுத்தும் செயலாகும்” என்று 1940, மே 20-ல் நேரு அறிவித்தார். இதே நேரத்தில் காந்தி, “பிரிட்டனுடைய அழிவிலிருந்து எங்களது சுதந்திரத்தைத் தேடவில்லை” என்று அறிவித்தார்.

இந்தியாவெங்கும் கொந்தளிப்பு; குழப்பம்; தனிப்பட்ட பிரிவுகளும் குழுக்களுமே இப்போராட்டங்களை நடத்தின. ஏகாதிபத்திய காலனி அரசு கடும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது.





படிப்பகம்

www.padippakam.com

அதுமட்டுமல்ல, இங்கிலாந்து ஒரு நியாயமான இலட்சியத்திற்குப் போராடுவதாகவும் அதற்கு இந்தியா நிபந்தனையற்ற ஒத்துழைப்பு தரவேண்டும் எனவும் அறிவித்தார். "ஆகையால் நான் இப்போது இந்தியாவின் விடுதலையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கவில்லை. அது கட்டாயம் வரும். ஆனால் இங்கிலாந்தும் பிரான்சும் வீழ்த்துவிட்டால் என்ன ஆவது?"[1] என்று காலனியாதிக்கவாதிகளுக்காக கண்ணீர் வடித்தார்.

1941-ம் ஆண்டு அக்டோபர் 12—ம் தேதிகூட காந்தி பின்வருமாறு சொன்னார்: "இங்கிலாந்தின் நெருக்கடியான நேரம் தான் நமக்கு சரியான சந்தர்ப்பம் என அடிக்கடி கூறப்படுகிறது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பம்பாய் தீர்மானம் அத்தகைய கொள்கை எதையும் நிராகரிக்கிறது. நாம் எவ்வாறு இங்கிலாந்தை அதன் நெருக்கடியான வேளையில் சங்கடப்படுத்திக் கொண்டே, அகிம்சாவாதிகள் என நம்மை அழைத்துக் கொள்ள முடியும்?"[2]

இவ்வாறு காந்தியும் காங்கிரசும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டு அமைதியாகஇருந்தனர். மக்களுடைய மனோநிலை எப்படி இருக்கிறது என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். மறுபக்கம், இந்தியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் மாணவர்களும் யுத்தத்திற்கு எதிராகவும் இந்தியாவை இங்கிலாந்தின் போர் இரதத்தில் மாட்ட வைத்ததற்கு எதிராகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்களில் ஈடுபட்டனர். ஏகாதிபத்திய காலனி அரசு கடும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. இந்திய பாதுகாப்பு சட்ட விதிகளை அமுலுக்கு கொண்டு வந்து ஏராளமான பேரைக் கைது செய்தது.

இந்த நிலையில் 1942—ம் ஆண்டு வந்தது. உலக யுத்தத்தில் ஜெர்மன்—ஜப்பான் முகாமான அச்சு நாடுகளின் கை மேலோங்கியது. அனேகமாக ஐரோப்பா கண்டம் முழுவதையும் நாஜி ஜெர்மன் படைகள் படுவேகத்தில் தமதுகாலடியில் கொண்டுவந்தன. ஜப்பானிய படையெடுப்பிற்கு முன் மலேசியாவிலும் பர்மாவிலும் இருந்த இங்கிலாந்தின் காலனிய அரசுகள் பொலபொலவென உதிர்ந்தன. ஜப்பானிய படைகள் படுவேகத்துடன் இந்திய எல்லை வரை முன்னேறியது. இவையெல்லாம் சேர்ந்து அச்சு நாடுகள்தான் உலக யுத்தத்தில் இறுதி வெற்றியடையும் என்று ஒருபிரிவு இந்திய தரகு முதலாளிகளையும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளையும் நம்ப வைத்தன. ஜப்பானின் அடுத்த ஒரு தாக்குதலில் இந்தியா அதன் வசம் வந்து விடும் என்று இவர்கள் உறுதியாக நம்பினர். உண்மை நிலையும் அதுவாகத் தானிருந்தது. எனவே, இனி

மலும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு அடிவருடியாக இருக்க அவர்கள் விரும்பவில்லை. வெற்றி பெறப் போகும் புதிய எஜமானனான ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்ய விரும்பினர். ஜப்பானிய மூலதனத்துடன்புதிய உறவுகளைஉருவாக்க எண்ணினர். இந்தியாவை விட்டு வெளியேறுமாறு ஆங்கிலேயருக்கு நிர்ப்பந்தம் கொடுக்க விரும்பினர். சுருக்கமாகச் சொன்னால், அவர்கள் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை விட்டு தப்பத் துடிக்கும் எலிகளைப்போல இருந்தனர். காந்தியின் தளபதியான பட்டாபி சீதாராமையாவின்வார்த்தைகளில் இந்த சிந்தனை பின்வருமாறு பிரதிபலித்தது. "இந்தியா ஒரு மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலுடனோ, உதிர்ந்து கொண்டிருக்கும் நட்சத்திரத்துடனோ தன்னை இணைத்துக் கொள்ள வேண்டுமா?"[3].

ஜப்பானின் தாக்குதல் வேகத்தைக் கண்டு காலனிய ஆங்கிலேய அரசாங்கமும் பீதியுற்று, அசாமையும் வங்காளத்தையும் கை கழுவியது. அதற்கு முன் அந்தப் பகுதிகளில் எதிரிப் படைகளுக்குப் பயன்படலாம் எனக் கருதப்படுகின்ற கட்டிடங்களை இடித்துத் தள்ளுதல், பயிர்களை எரித்தல் ஆகியவற்றை, நிலத்தீய்ப்புக் கொள்கையை (SCORCHED EARTH POLICY) ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கையாண்டது. பீகாரில் புதிய தற்காப்பு அரண்களைக் கட்டியது. இவையெல்லாம் இந்திய தரகுப் பெரு முதலாளிகள் மற்றும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளிடையே பீதியை உருவாக்கிற்று.

நிலைமையைக் கணிப்பதிலும்

'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் பம்பாயில் நடந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் 1942ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் தேதி நிறைவேறியது.



படிப்பகம்

www.padippakam.com

செயல்படுவதிலும் காங்கிரசிற்குள் மூன்று பிரிவினர் தோன்றினர். ஜப்பானிய முகாம் வெற்றி பெற்று இந்தியாவைக் கைப்பற்றும் என உறுதியாக காந்தி நம்பினார். எனவே, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி ஜப்பானியரோடு தாங்கள் கூட்டு வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று விரும்பினார். நேரு, ராஜாஜி, ஆசாத் ஆகியோர் ஆங்கிலேய ஏகாதிபத்திய முகாமே உலக யுத்தத்தில் இறுதி வெற்றி பெறும் என நம்பினார்கள். எனவே, தொடர்ந்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்று வாதாடினர். சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் ஒரு பிரிவினர் பாசிச ஜெர்மன்—ஜப்பான் முகாமை நேரடியாக ஆதரித்து படைதிரட்டிக் கொண்டு களத்திலேயே இறங்கினர்.

“இங்கிலாந்து ஜீவமரண போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கும்போது, அதை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவது இந்தியாவின் கௌரவத்திற்கே இழிவு ஏற்படுத்தும் செயலாகும்” என்று 1940, மே 20-ல் நேரு அறிவித்தார். இதே நேரத்தில் காந்தி, “பிரிட்டனுடைய அழிவிலிருந்து எங்களது சுதந்திரத்தைத் தேடவில்லை” என்று அறிவித்தார்.

1940—ல் இட்லரிடம் ஹாலந்து சரணடைந்ததிலிருந்து காந்தியின் பார்வையில் இட்லரின் நிலை “சீராக உயர்ந்து கொண்டிருப்பதாவும்” யுத்தத்தில் இங்கிலாந்து தோற்றுவிடும் என்று காந்தி நம்புவதாகவும் ஜி.டி பிர்லாவிடம் காந்தியின் செயலாளர் மகாதேவ் தேசாய் தெரிவித்தார். 1940ம் ஆண்டு மே 26—ல் வைசிராய் லின்லித்கௌ—க்கு காந்தி எழுதிய கடிதத்தில், “சமாதானத்தை நாடுமாறு” ஆங்கிலேய அமைச்சரவைக்கு ஆலோசனை கூறினார். மேலும் அக்கடிதத்தில், “சித்தரிக்கப் படுவதைப்போல இட்லர் அவ்வளவு மோசமான மனிதராக இருப்பார் என்று நான் நம்பவில்லை” என்றும் குறிப்பிட்டார். மேலும் இங்கிலாந்து மக்களை, “நீங்கள் எல்லாரும் உங்களையோ, மானுடத்தையோ காப்பாற்ற முடியாத உங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட வேண்டும். போராடுவதற்குப்பதில் திருவாளர் இட்லரையும் சீமான் முசோலினியையும் வரவேற்று உங்களுடைய நாடுகள் என்று சொந்தம் கொண்டாடும் பகுதிகளில் அவர்களுக்கு எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ள சொல்ல வேண்டும்.” என்று வற்புறுத்தி காந்தி வேண்டுகோள் விடுத்தார்.

ஆங்கிலேயர்களிடம் காந்திக்கு இருந்த முந்தைய அனுதாபம் நாஜிப் படைகளுக்கு அமைதியாக காத்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களிடம் ஆங்கிலேயர்கள் சரணடைவதே சிறந்தது என அறிவுறுத்துவதாகவும் உருமாற்றம் அடைந்தது. 1942 ஏப்ரலில் காந்தி, “தாம் முன்பு இங்கிலாந்திற்கு முற்றிலும் கொடுத்து வந்த தார்மீக ஆதரவை, இப்போது கொடுக்க மனம் மறுக்கிறது” என்று கூறினார். ஆம், ‘மகாத்மா’வின் ‘அந்தரங்கக் குரல்’ இப்போது முற்றிலும் வேறுபட்ட பாதையை மேற்கொள்ள கட்டளையிட்டது. எனவே, ஆங்கிலேய அரசுப் பிரதிநிதி கிரிப்ஸ் திரும்பிச் சென்ற பிறகு, காந்தி காங்கிரசின் காரியக் கமிட்டிக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் நகல் தீர்மானம் ஒன்றை, ஏப்ரல் 27 தொடங்கி நிகழவிருந்த அலகாபாத் மாநாட்டிற்கு ஏற்றுக் கொள்ள அனுப்பினார். அத்தீர்மானத்தில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

“அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இந்தியாவை இனியும் இங்கிலாந்தால் பாதுகாக்க முடியாது எனக் கருதுகிறது... ஜப்பானின் சண்டை இந்தியாவுடனானது அல்ல. இந்தியா விடுதலை அடையுமானால் அதன் முதல் நடவடிக்கை ஜப்பானுடன் பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கும். இக்கமிட்டி ஜப்பானிய அரசு மற்றும் மக்களுக்கு இந்தியா அவர்களுடனோ வேறெந்த நாட்டுடனோ எவ்வித பகைமையும் கொண்டிருக்கவில்லை என உறுதியளிக்கிறது.”

வல்லபபாய் படேல், ராஜேந்திர பிரசாத், கிருபளானி போன்றோரால் ஆதரிக்கப்பட்ட காந்தியின் நகல் தீர்மானத்தை நேரு பின்வருமாறு விமர்சித்தார்: “நாம் பாபுவின் (காந்தியின்—மொ,ர்,) அணுகுமுறையை ஏற்போமாகில், அச்சு நாடுகளின் மறைமுக கூட்டாளிகளாகி விடுவோம். இத்தீர்மானத்தின் முழு சிந்தனையோட்டமும் பின்னணியும் ஜப்பானுக்குச் சாதகமாக இருக்கிறது. ஜப்பானும் ஜெர்மனியும் போரில் வெல்லும் என்று காந்தி நம்புகிறார். இந்த நம்பிக்கை அவரது முடிவை அவரையும் அறியாமலேயே ஆளுமை செய்கிறது”

ராஜேந்திர பிரசாத்தால் திருத்தப்பட்ட காந்தியின் நகல் தீர்மானத்தைப் பற்றி கருத்து கூறும்போது ராஜகோபாலாச்சாரி, “ஜப்பான் ஆங்கிலேயரின் வெளியேற்றத்தால் உருவாக்கப்படும் வெற்றிடத்தை நிரப்பும்... இத்தீர்மானம் சொல்வதுபோல ஜப்பானின் கரங்களில் ஓடிவிழுந்துவிடக் கூடாது.”

காந்தியோ மிகவும் அவசரப்பட்டார். 1942 மே-ல் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில் காந்தி கூறினார்: “இந்த ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட, கட்டுப்பாடான அராஜகம் (அதாவது ஆங்கிலேய ஆட்சி) ஒழிய வேண்டும். இதன் விளைவாக முற்றிலும் சட்டம் ஒழுங்கு சீர்குலையுமானாலும் அதை நான் எதிர்கொள்வேன்.” மேலும் 1942 ஜூன் 7ம் தேதியிட்ட ‘அரிஜன’ ஏட்டில் “அடிமை ஓட்டுனர்களை எதிருங்கள்” என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். 1942 மே 28ல் ராஷ்ட்ரிய யுவக் சங் எனும் அமைப்பினுடைய உறுப்பினர்களிடம், “இந்த அடிமைத்தனத்தின் பேரழிவிலிருந்து விடுவித்துக் கொள்ள நாம் வன்முறையைக்கூட ஏற்கலாம்” என்றார் காந்தி.


இவ்வாறு காந்தி, படேல், பிரசாத் ஆகியோர் ஜப்பானிய படைகளின் வெற்றியை ஆவலுடன் எதிர்நோக்கி ஆங்கிலேயர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறி அதன் மூலம் தாங்கள் ஜப்பானுடன் ஒப்பந்தத்திற்கு வர இங்கிலாந்தை நெருக்கியபோது, நேருவும் ஆசாத்தும் நேசப்படைகள் (அமெரிக்கா—இங்கிலாந்து—பிரான்சு முகாம்) இறுதி வெற்றியடையும் என உறுதியாக நம்பினர். நேரு சியாங்கே ஷேக்குடனும் அமெரிக்காவுடனும் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டார். ஆங்கிலேய ஆதிக்கமே தொடர வேண்டும்—இந்தியா சுதந்திரம் பெற வேண்டுமென்பதல்ல—என்ற நேருவின் கருத்தை ஆதரித்தார் ராஜாஜி. முஸ்லிம் லீகுடன் அவர்களின் தனிநாடு கோரிக்கையை ஏற்றுக் கொள்வதன் அடிப்படையில் இணைந்து, ஆங்கிலேய ஆட்சிக் குடையின்கீழ் ஒரு “தேசிய அரசாங்கத்தை” நிறுவி ஜப்பானை எதிர்க்க வேண்டுமென்று வாதாடினார்.

காங்கிரசின் மேல்மட்டத் தலைமையில் ஏற்பட்ட இந்த பிளவு இந்திய தரகுப் பெரு முதலாளிகளின் முரண்பட்ட விருப்பங்களையே பிரதிபலித்தது. வால்சந்த், ஹீராசந்த் போன்ற பல குஜராத், மார்வாரி மில் முதலாளிகள் ஜப்பானிய எஜமானர்களை வரவேற்க காத்திருந்தபோது மற்



படிப்பகம்

www.padippakam.com



காந்தியின் உபதேசங்களை மீறியும் அவருடைய கண்டனங்களைப் புறக்கணித்தும் மக்கள் நாடெங்கும் வன்முறை கிளர்ச்சிகளைத் துவங்கினர்.

றொரு பிரிவு, **ஆங்கிலேய ஆதரவு குழுவாகவே நீடித்தது. மூன்றாவ**தாக ஒரு பிரிவு உயர்ந்துகொண்டிருந்தஅமெரிக்காவுடன்இணைந்து கொள்ள முன்வந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய தரகுப் பெரு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களுக்கும் பிறந்த கள்ளக் குழந்தையான காங்கிரஸ் கட்சி, இந்தியாவின் சுதந்திரத்திற்கு என்றுமே பாடுபட்டதில்லை. மாறாக, தரகுப் பெருமுதலாளிகள்—நிலப்பிரபுக்களின் அரசியல்பிரதிநிதியானகாங்கிரசு, சுதந்திரவேட்கையால் தன்னெழுச்சியாகபோராடிய இந்திய மக்களின் தீரமிக்க போராட்டங்களை காட்டிக் கொடுத்து, துரோகமிழைத்தது. மக்களுடைய போராட்டங்களை திசை திருப்பி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு கேடயமாக விளங்கியது. காலனிய ஆட்சியை புதிய அடித்தளங்களில் தக்க வைக்கும் கருவியாக செயல்பட்டது. இதுவரை ஒரே முகாமாக இருந்த காங்கிரசில்தான், ஜப்பானின் படுவேகமான முன்னேற்றம் மேற்சொன்ன பிரிவுகளைக் கொண்டு வந்தது.

இந்தப் பிரிவினர் கொண்டிருந்த கருத்து வேறுபாடெல்லாம் எந்த ஏகாதிபத்திய முகாம்வெற்றி பெறும் என்ற கணிப்பில்தான். ஆனால் வெற்றிபெறும் முகாமிற்கு இந்தியா அடிமையாக இருக்க வேண்டுமென்பதில் கருத்து ஒற்றுமையிருந்தது.

'வெள்ளையனே வெளியேறு' என்று காந்தியும் காங்கிரசும்அறைகூவல் விடுத்ததன் பின்னணி இதுவே. எதிர்ப்புதெரிவித்தநேரு, ஆசாத் ஆகியோரை காங்கிரசின் பொறுப்புகளிலிருந்து ராஜினாமா செய்யச் சொல்லி மிரட்டியும் பிறவாறு உருட்டியும் தனது தீர்மானத்தை ஏற்குமாறு காந்தி செய்தார். ஓர் எதேச்சதிகாரியாகவே காந்தி நடந்து கொண்டார். இப்படித்தான் ஏகமனதாக, 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் பம்பாயில் நடந்த காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் 1942ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் தேதி நிறைவேறியது

ஒரு பக்கம் ஜப்பானிய புது எஜமானர்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறோம் என்று நிருபிக்க 'செய் அல்லது செய்து மடி' என்று தீவிரமாக காந்தி அறைகூவல் விட்டாலும் இன்னொரு பக்கம் மக்களின் போராட்டங்கள் தனது கையை விட்டுப் போய்விடக் கூடாது என்பதிலும் குறிப்பாக இருந்தார். எனவேதான் போராட்டத்திற்கு எவ்வித தயாரிப்போ, திட்டமோ தீட்டப்படவில்லை. பேச்சு வார்த்தை நடத்துவதே நோக்கம் என்று சொல்லப்பட்டது.

1942ம் ஆண்டு ஆகஸ்ட் 14—ம் தேதி காந்தி வைசிராய்க்கு எழுதிய கடிதத்தில். "நான் பெரும் நடவடிக்கைகளைத் தொடங்கும் வரையாவது இந்திய அரசாங்கம் காத்திருக்கவேண்டும். உருப்படியான ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் முன் உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்ப பூரணமாகச் சிந்திப்பதாய் நான் வெளிப்படையாக அறிவித்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டார். போராட்டம் தொடங்கும் முன்பிரச்சினை எழுவதற்கு முன், முதல் நடவடிக்கையாக வைசிராய்க்கு பேச்சு வார்த்தை வேண்டிஎழுதப்படும் என்று காங்கிரசால்விளக்கம் தரப்பட்டது. காங்கிரசு கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வைசிராய்க்கு கடிதம் எழுதத் தொடங்கினார்கள். முடிக்கும் முன்பே ஆகஸ்ட் 9ம் தேதி காந்தி உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர். காங்கிரசு சட்டவிரோதமான ஸ்தாபனம் என அறிவிக்கப்பட்டது. "ஒரு வாரத்தில் வெற்றி" என்று படேல் சவடால் அடித்தார்.

காங்கிரசு தலைவர்களின் கைது மக்களது போராட்டங்களைத் தூண்டி விடும் என ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குத் தெரியும். எனினும், காங்கிரசு தலைவர்கள் எவ்வித முன் தயாரிப்பும் செய்யாததால் தன்னெழுச்சியான திட்டமிடாத போராட்டங்களை சுலபமாக அடக்கி விடலாம் என ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கருதியது.

ஆனால் இந்திய மக்களோ, காந்தியின் நயவஞ்சக விருப்பத்தை மீறி, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார்கள். காந்தியின் உபதேசங்களை 'மீறியும் அவருடைய கண்டனங்களைப் புறக்கணித்தும் மக்கள் நாடெங்கும் வன்முறை கிளர்ச்சிகளைத் துவங்கினர். இந்தியாவெங்கும் கொந்தளிப்பு; குழப்பம்; தனிப்பட்ட பிரிவுகளும் குழுக்களுமே இப்போராட்டங்களை நடத்தின.

இதுதான் 'புகழ் பெற்ற' ஆகஸ்ட் போராட்டம்; இந்த போராட்டத்தை காங்கிரசு ஆரம்பிக்கவில்லை; மாறாக, இந்தியாவின் உழைக்கும் மக்கள் இப்போராட்டத்தினை நடத்தினர்; காந்தியும் காங்கிரசும் போராட்டத்தை தடுத்து நிறுத்தவே

படிப்பகம்

www.padippakam.com

செயல்பட்டனர்; ஆனால், இன்றோ, ஆகஸ்ட் தியாகிகள் என வெட்கமின்றி காங்கிரசுகாரர்கள் பீற்றிக் கொள்கிறார்கள். இந்தியாவை புதிய எஜமானனுக்கு (ஜப்பானுக்கு) அடகு வைக்க 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் போட்ட காந்தியும் காங்கிரசுகாரர்களும் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதந்திரப் போராட்ட வீரர்களாக காட்டிக் கொள்வது கயமைத் தனத்தின் உச்சியாகும்!

1943—44ம் ஆண்டுகளில் யுத்தத்தின் போக்கு மாறியது; உலக அளவில் ஜெர்மன்—ஜப்பான் பாசிச முகாம் வீழ்ச்சியடையத் தொடங்கியது; இங்கிலாந்து—பிரான்சு முகாம் வெற்றி மேல் வெற்றி பெற்று வந்தது; ஜெர்மன்—ஜப்பான் முகாமினுடைய வீழ்ச்சி தவிர்க்கமுடியாதது என்று தெள்ளத் தெளிவாக தெரிய ஆரம்பித்தது. பார்த்தார் காந்தி! அடித்தார் ஒரு 'அந்தர்' பல்டி! அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாகிவிடப்போகிறதே என்று ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு மீண்டும் தன் எஜமான விசுவாசத்தைக் காட்ட வாலை ஆட்டினார். நடந்த

> **இரண்டாம் உலகப் போரின்போது இந்தியாவை புதிய எஜமானனாகிய ஜப்பானுக்கு அடகு வைக்க 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் போட்ட காந்தியும் காங்கிரசும், யுத்தத்தின் போக்கு மாறி ஜப்பான் பாசிச முகாம் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் திடீர் பல்டி அடித்தனர். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு மீண்டும் தமது எஜமான விசுவாசத்தைக் காட்ட வாலை ஆட்டினர்.**

போராட்டங்களுக்கு தான் பொறுப்பல்ல என்று வலியச் சொல்ல ஆரம்பித்தார். 1943ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி உள்நாட்டு துரைக்கு காந்தி எழுதிய கடிதத்தில், "மொத்தமாகப்பெருமளவில் காங்கிரசு தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் தங்களை அடக்கிக் கொள்ளும் ஆற்றலை இழக்கும் அளவிற்கு மக்கள் சினத்தால் வெறிகொண்டு விட்டதாய் தோன்றுகிறது. நடந்துள்ள நாசத்திற்கு காங்கிரசு பொறுப்பல்ல; அரசாங்கமே பொறுப்பு என்று நான் கருதுகிறேன்."

"இந்தியா முழுவதும் கைதுகள் செய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கை மிக வன்முறையாக இருந்ததால், காங்கிரசிடம் பரிவு உள்ள மக்கள் தன்னடக்கத்தை இழந்து விட்டார்கள். இந்த தன்னடக்க இழப்பிற்கு காங்கிரசு உடந்தை என்று பொருளாகி விடாது" என்று தெரிவித்தார்.

1942 ஆகஸ்ட் 7, 8 தேதிகளில் நடந்த அகில இந்திய காங்கிரசு கமிட்டி கூட்டத்தில், காங்கிரசுகாரர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்புவதாக தீர்மானிக்கப்பட்டது. அது முழுமையாக வரையப்படாது நின்று விட்டது. 1943, ஜூலை 15-ல் காந்தியார் இந்த வரையப்படாத சுற்றறிக்கையைதயக்கத்துடன் மேற்கோள் காட்டினார்; அதில் பின் வருமாறு இருந்தது.

"மகாத்மா முடிவு செய்யும் வரை எந்த இயக்கமும் முடிவு செய்யக்கூடாது; எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. இறுதியாக அவர் வேறுவிதமாக முடிவு செய்யலாம். ஒரு பெரிய அனுமதி பெறாத தவறுக்கு நீங்கள் பொறுப்பாளி ஆவீர்கள். ஆயத்தமாக இருங்கள்; ஏற்பாடு செய்யுங்கள்; விழிப்போடு இருங்கள்; ஆனால் எவ்விதத்திலும் செயல்படாதீர்கள்". காங்கிரசின்சார்பில் நேரு, வல்லபாய் படேல், நி. பி பந்த், ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட ஓர் அதிகாரபூர்வமான அறிக்கை 1945, செப்டம்பர் 21-ல் வெளியாயிற்று: அதில்,

"ஆகில இந்திய காங்கிரசு கமிட்டியாலோ காந்தியாலோ எந்த இயக்கமும் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்படவில்லை" என தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு, ஆகஸ்டில் நடந்த போராட்டங்களுக்கும் காங்கிரசிற்கும் கிஞ்சித்தும் தொடர்பில்லை என காலனியாதிக்கவாதிகளிடம் தன்னை நல்ல பிள்ளைபோல காட்டிக் கொண்ட காங்கிரசு, ஆகஸ்டு மாதத்திலும் அதை அடுத்த மாதங்களிலும்நடைபெற்ற தலைமையற்ற தன்னெழுச்சியான நிகழ்ச்சிகளை பின்னாளில் "ஆகஸ்ட்டு போராட்டம்" என ஏற்பதென்று முடிவு செய்தது. அதாவது, காந்தியின் கண்டனங்களை புறக்கணித்துவிட்டு மக்கள் நடத்திய போராட்டங்களையே காந்தியும் காங்கிரசும் நடத்திய "ஆகஸ்டு போராட்டம்" என சுவீகரித்துக் கொண்டனர்.

உண்மையான விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு இந்திய உழைக்கும் மக்கள்எண்ணற்ற தியாகங்கள் செய்து—நடத்திய வீரஞ்செறிந்த போராட்டங்களை கண்டனம் செய்த காந்தியும் காங்கிரசும், பின்னர் அந்தப் போராட்டங்களையே காங்கிரசின் தியாகமாக, விடுதலைப்போராட்டமாக சித்தரித்து சுவீகரித்து கொள்வது எவ்வளவு பெரிய வ கிரம்! வரலாற்றுப் புரட்டு!

உண்மையில் வெள்ளையனை இந்த நாட்டைவிட்டு விரட்டுவது தான் காந்தியின் நோக்கமென்றால், சிறையிலிருந்து 1944-ம் ஆண்டு காந்தியார் வெளிவந்த பின் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் காந்தியாரே 'ஆகஸ்ட் தீர்மானம் தானாகவே ரத்தாகி விட்டது' என்று சொன்னார். ஏனென்றால், '1944—ம் ஆண்டில் 1942-ம் ஆண்டுக்கு திரும்பிச் செல்ல முடியாது' என்று விளக்கெண்ணெய் விளக்கமளித்தார்.

எனவே போர் முடியும் தறுவாயில், (ஆகஸ்ட் 1945) உலகெங்கும் மக்கள் விடுதலையை நோக்கி முன்னேறியபோது காந்தியாரின் துரோகத்தனத்தால் இந்தியா போரின் தொடக்கத்தில் இருந்தது போல் ஓர் அடிமை நாடாகவே போரிலிருந்து வெளிப்பட்டது.

அடிக்குறிப்புகள்:

1. 'அரிஜன்', செப் 9, 1939.
2. பி. பட்டாபிசீதாராமையா —இந்திய தேசிய காங்கிரசின் வரலாறு, பக்கம் 278.
3. ஷ, பக். 283.
4. பிர்லா— 'மகாத்மாவின் நிழலில்' பக்கம் 273; அபுல்கலாம் ஆசாத், "இந்தியா சுதந்திரம் அடைகிறது", பம்பாய், 1959, பக்கம் 72; ராஜேந்திர பிரசாத் சுயசரிதை, பம்பாய் 1959, பக்கம் 531; நேரு— டிஸ்கவரி ஆஃப் இந்தியா, பக்கம் 431.
5. ஷ, பக்கங்கள் 100, 214 215, 230.
6. சீதாராமையா — மேற்குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 334.
7. 'அதிகார மாற்றம்' — பகுதி II, பக்கம் 63, 66—70; இந்திய அரசாங்கம் "1942—43 போராட்டங்களுக்கு காங்கிரசின் பொறுப்பு", டெல்லி, 1943, பக்கம் 46—48.
8. ஷ, பக்கம் 129—132.
9. மகாத்மா காந்திதொகுப்பு நூல், பகுதி 76, பக்கம் 155, குறிப்பு 3, பக்கம் 160.

(ரஜினி பாமிதத் என்பவர் எழுதிய 'இன்றைய இந்தியா' என்ற நூலையும், சுனிதி குமார் கோஷ் எழுதிய 'இந்தியப் பெரு முதலாளிகள்' என்ற நூலையும் அடிப்படையாகக் கொண்டு இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இதில் வரும் பிற மேற்கோள்கள் அந்நூல்களிலிருந்து எடுத்தாளப் பட்டவையே).

● வண்டார் குழலி மணாளன்



படிப்பகம்

www.padippakam.com

# மூர்ஷிதாபாத் மதக் கலவரம்

## எஞ்சிய மாநிலத்தையும் எட்டுகிறது மதவெறித்தீ!

ஜூன் 24. அது 'ரத்தநாள்; கறுப்பு வெள்ளிக்கிழமை'. மேற்கு வங்கமூர்ஷிதாபாத்முஸ்லீம் மக்கள் ஜூன் 24ஆம் நாளை இப்படித்தான் பெயரிட்டு அழைக்கிறார்கள். காரணம் 50க்கும் மேற்பட்ட அவர்களது முஸ்லீம் சகோதரர்களை இந்துமத வெறியர்களுக்கு அன்றுதான் அவர்கள் பலிகொடுத்தார்கள்.

18—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்ரா மசூதி. 1897ஆம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கத்தால் சிதலமடைந்த நிலையில் 1914ஆம் ஆண்டு அதை இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. பிறகு அதை தேசீய அருங்காட்சியகமாக அறிவித்தது. அங்கிருக்கும் பெரும்பான்மையான முஸ்லீம் ஏழைமக்கள் இதைப்பற்றி பெரிதாக கண்டுகொள்ளவில்லை. அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கான போராட்டத்தில் மூழ்கிப் போயிருந்தனர். ஆனால் மத வெறியர்களால் சும்மா இருக்க முடியுமா? 'கட்ரா மசூதியைப் பாதுகாப்போம்! நம் பாரம்பரிய வழிப்பாட்டு தலத்தைக் கைப்பற்றுவோம்' என்று சமயம்கிடைக்கும் போதெல்லாம் மதவெறியூட்டினர். சிறு பொறியாக அவ்வப்பொழுது கிளம்பிக் கொண்டிருந்த இப்பிரச்சினை கடந்த ஜூன் 24ந் தேதி பெரும் மதக் கலவரமாக கொழுந்து விட்டெரிந்தது.

மேற்குவங்க சட்டசபை உறுப்பினனும், அம்மாநிலத்தின் முஸ்லீம் லீக் கட்சியின் உறுப்பினனுமான ஏ. கே. எம். ஹாசன் ஷக்மான், முஸ்லீம் மதவெறிக்கு தலைமை தாங்கினான். 'கட்ரா மசூதி உள்ளிட்டு மாநிலத்தில் உள்ள 14 மசூதிகளில் முஸ்லீம்களின் தொழுகை உரிமையை நிலைநாட்டுவோம்' என அனைத்து முஸ்லீம் மக்களுக்கும் அறைகூவல் விடுத்தான். இதற்காக, ஜூன் 24ந் தேதியன்று கட்ரா மசூதியை நோக்கி பெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 40,000க்கும் மேற்பட்டவர்கள் மே. வங்கத்தின் மொத்த மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலமான பீகாரிலிருந்தும் மற்றும் அண்டை நாடான பங்களாதேஷ் நாட்டிலிருந்தும் கூட இதற்கு ஆட்கள் திரட்டப்பட்டனர். தடையுத்திரவை மீறி கூட்டம் கூட்டப்பட்டது.

மதவெறியர்களின் பலத்தைக் கண்டு பின் வாங்கிய மே. வங்க போலிக் கம்யூனிஸ்ட் அரசு, தடையுத்திரவை கிடப்பில்போட்டு ஊர்வலத்திற்கு அனுமதித்தது.

ஊர்வலம் துவங்கிய சிறிது நேரத்தில் ஊர்வலத்தின் பாதையில் இருக்கும் சாலையோர கடைகளின் மீதும் கட்டிடங்களின் மீதும் ஊர்வலத்திலிருந்த ஒரு கும்பல் கல்லெறியில் ஈடுபட்டது.

நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்துமத வெறியர்கள் ரபி தாக்கூர் என்பவனின் தலைமையின் கீழ் திரண்டு கண்ணில் கண்ட முஸ்லீம் மக்களை எல்லாம் வெறிகொண்டு வெட்டி சாய்த்தனர். ஊர்வலம் சென்ற கோசிம் பஜார் பகுதியே சிறிது நேரத்தில் மரண ஓலத்தில் அலறியது. வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களுடன் தறிகெட்டுத் திரிந்த இந்துமத வெறியர்கள் சிறுவர்கள், முதியவர்கள் என்றும் பார்க்காமல் எதிர்பட்டவர்களை குத்தி கிழித்து போட்டனர். ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்கு இந்த நரவேட்டை நடந்தது. லால் கோலாநகரத்தைநோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் ரயிலையும் தடுத்து நிறுத்தி அதில் பயணம் செய்த முஸ்லீம் மக்களையும் வெட்டிக் கொன்றனர். பாதுகாப்புக்கு வந்திருந்த போலீசோ அப்பட்டமாக இந்துமத வெறியர்களுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றனர். உதவி கேட்டு வந்த முஸ்லீம்களிடம் ''கொலைகாரர்களுக்கு எதிராக நாங்கள் ஏதாவது செய்யத் துணிந்தால் எங்களையும் கொன்று விடுவார்கள்'' என்று பேடித்தனமாக கூறியிருக்கின்றனர்.

ஜோதிபாசு தலைமையிலான போலிக் கம்யூனிஸ்டு அரசோ இறந்தது 13 பேர்தான் என்று அப்பட்டமாக புளுகி, கண்துடைப்புக்காக விசாரணை நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறது.

இப்படுகொலைகளைக் கண்டித்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் மே.வங்கத்தின் அனைத்து ஓட்டுப் பொறுக்கி கட்சிகளுக்கும் இதில் கணிசமான பங்குண்டு.

குறிப்பாக, ஜோதிபாசு தலைமையிலான போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் உள்ளூர் தலைமை, முஸ்லீம் மதவெறியர்களுக்கு இணையாக களத்தில் ஓட்டுப் பொறுக்க எண்ணற்ற சமயங்களில் மதவெறி துருப்பு சீட்டையே பயன்படுத்தியது. '87 பொதுத் தேர்தலின்போதும், '88 பஞ்சாயதது தேர்தலின் போதும் இது பெரிய அளவில் வெளிப்பட்டது. ''ராஜீவ் அரசால் நீங்கள் ஏற்கனவே பாப்ரி மசூதியை இழந்தீர்கள். இப்போது காட்ரா மசூதியையும் அதே வழியில் பறிக்க முயற்சிக்கிறார்கள்'' என ஓட்டுப் பொறுக்கினார்கள்.

ஜூன் 24 மதவெறி ஊர்வலத்திற்கு அறைகூவல் விடுத்த முஸ்லீம் மதவெறியர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கைகட்டி வேடிக்கை பார்த்ததும், அவர்களிடம் ஆதரவு பெறத்தான்.

கலவரம் நடந்து இரண்டுமாத காலமாகியும் இன்னும் இந்துமத வெறியர்கள் ஓயவில்லை. படுகொலை நடந்த கோசிம் பஜார் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இதுவரை 20க்கும் மேற்பட்ட மூஸ்லீம் சகோதரர்களை காணவில்லை. அவர்களும் வெட்டிக் கொல்லப்பட்டு அருகில் இருக்கும் ஆற்றில் வீசியெறியப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகாலமாக மதக்கலவரங்களிலிருந்து எஞ்சியிருந்த ஒரே மாநிலம் மே வங்கம் என்ற பெருமை இப்போது சுக்குநூறாக சிதறி வருகிறது. மதவெறி கலவரங்களுக்கு அடிப்படைக் காரணமே, மதவெறி சக்திகளுடன் ஓட்டுப் பொறுக்கிகள் கட்சிக்குக்கும், ஆட்சிக்கும் இருக்கும் கள்ளக் கூட்டுகள்தான். இதற்கு போலிக் கம்யூனிஸ்டுகளின் கட்சியும் ஆட்சியும் விதிவிலக்கல்ல.

மதவெறி சக்திகளை முடமாக்குவதற்கு ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பதற்குப் பதிலாக மதவெறி சக்திகளை தமது ஆட்சியதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான துருப்புச்சீட்டாகபயன் படுத்துவது பாசிச ராஜீவ் கும்பலின் வழிமுறை. இதற்கு நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று நிருபிக்கிறார்கள் போலிக்கம்யூனிஸ்டுகள். ரஷிய திரிபுவாதிகளுக்கு ஒரு ஆர்மீனியா. அவர்களின் எடுபிடிகளுக்கு ஒரு மூர்ஷிதாபாத்.

இந்துமத வெறியர்களுக்கு குடும்பத்தாரைபலிகொடுத்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# டி.வி.எஸ். சதர்ன் ரோட்வேஸ்

# நிர்வாகத்தின் சர்வாதிகாரம்

'வேடம் கலைகிறது' என டிவிஎஸ்ஸின் கொடூரச் சுரண்டல்களை தோலுரித்தது புதிய காலச்சாரம் பத்திரிக்கை. அந்தக் கட்டுரையாளனை கண்டுபிடித்து கருவருக்க டிவிஎஸ் செய்த எத்தணிப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல பத்திரிக்கை அலுவலகத்தின் மீது பாய்ந்து குதற வந்தன டிவிஎஸ்ஸின் வேட்டை நாய்களான போலீசு எடுபிடிகள். இந்த அடக்குமுறைகளை அடையாளங்காட்டி அடுத்தடுத்த தாக்குதலை நடத்தியது புதிய ஜனநாயகம்!

இந்தக் கட்டுரைகளின் சரியான கருத்துக்களால் உத்வேகம் பெற்ற தொழிலாளிகள் தங்களுக்கென தொழிற்சங்கம் ஒன்று அமைத்துப் போராட ஆரம்பித்தனர்.

தலையாட்டி பொம்மையாக ஐஎன்டியுசி மட்டுமே தொழிற்சங்கமாக டிவிஎஸ் தரகுப் 'பண்ணை'களால் அங்கீகரிக்கப்பட்டிருக்க, இன்னொரு தொழிற்சங்கத்தை எப்படி அனுமதிப்பார்கள்?

'சதர்ன் ரோடுவேஸ் எம்ப்ளாயீஸ் யூனியன்' என்ற புதிய தொழிற் சங்கத்தில், சென்னைப் பிரிவில் வேலை பார்க்கும் 242 பேரில் 183 பேர் இச்சங்கத்தில் இணைந்துள்ளனர். தமிழகத்தில் வேலை பார்க்கும் 1612 பேரில் 980 பேர் இச்சங்கத்தில் சேர்ந்துள்ளனர்.

எப்படிப்பார்த்தாலும் இதுவே இன்று பெரிய சங்கம். டிவிஎஸ் நிர்வாகம் தனது எடுபிடி ஐஎன்டியுசியுடன் செய்த ஒப்பந்தம் 31.3.88ல் முடிவுற்றது. முறையாக தொழிலாளிகளின் தொழிற் சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தாது சிறுபான்மை உறுப்பினர் கொண்ட ஐஎன்டியுசியுடன் பேச்சு நடத்தி(?!) 1991 ஆம் ஆண்டுவரை ஒரு துரோகத்தனமான ஒப்பந்தத்தைப் போட்டுள்ளது. இதை ஏற்பவர்கள் மட்டுமே வேலை செய்யலாம் என்பதாக நிர்வாகம் நிர்பந்திருக்கிறது. ஏற்க மறுத்து தொழிலாளிகள் போராடுகின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் 142 பேர் தற்காலிக நீக்கமும் சென்னையில் சங்கத் தலைவர் ஜி. ஜெயசூரியன் செயலர் எஸ். கிருபாநிதி, பொருளாளர் சி. எ. சீனிவாசன் உட்பட 24 பேர் பொய் குற்றச்சாட்டில் சஸ்பெண்ட்செய்யப்பட்டுள்ளனர். மேலும் 8 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனர். 34 பேர் நிரந்தர வேலை நீக்கமும் செய்யப்பட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத தொழிலாளிகளிகள் ஒய்வு பெறுகையில் சலுகைமறுக்கபடுகின்றனர். ஓய்வு வயதும் 55 ஆக குறைக்கப்பட்டு தொழிலாளிகள் பழிவாங்கப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் லேபர் கமிஷனர் செல்லதுரையிடம் முறையிட்டனர். அவர் நிர்வாகத்தின் கையாளாக செயல்பட்டு ஒரு டிவிஎஸ் 50., மற்றும் ஒரு ஃபிரிட்ஜ் என பரிசுகள் பெற்றுச் சென்றுவிட்டார். தற்போதுள்ள லேபர் கமிஷனர் மயில்சாமியிடம் இதையும் எடுத்துக் கூறி மனுச் செய்துள்ளனர். பிரச்சினை விசாரிக்கப்பட்டு வருகிறது.

கொத்தடிமைகள்:

''தென்னமரத்தில் தேள் கொட்ட பனைமரத்தில் நெறி கட்டிய'' கதை சொல்லுவார்கள். அப்படிச் சொன்னவன் டிவிஎஸ் நிர்வாகத்தைப் பார்த்துத்தான் சொல்லியிருக்கவேண்டும்.

வி எஸ் ராஜகோபால் என்பவர் சதர்ன் ரோடுவேஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் கமிட்டி உறுப்பினர். இவரது சகோதரர் வி எஸ் சேஷாதிரி அலுவலகப் பணியில் வேலை செய்கிறார். இவர் யூனியனில் கிடையாது. நிர்வாகம் இவரிடம் சென்று 'உன் சகோதரன் யூனியனைவிட்டு விலகவேண்டும்' என கெடுவைத்தது. ராஜகோபால் உறுதியாக நிற்பதால் சேஷாதிரிக்கு முற்றாக வேலை பறிபோய் விட்டது. அவரது ஐஎன்டியுசி சங்கமும் இதில் தலையிடவில்லை.

இதேபோல அனந்த நாராயணன், கமிட்டி மெம்பர். இவரது சகோதரர் நாராயணன் மதுரை கேண்டீனில்சூபர்வைசர். அனந்த நாராயணன் சங்கத்தை விட்டு விலகாததால், நாராயணன் வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டார். கேள்வி கேட்பாரில்லை.

இப்படி கடைந்தெடுத்து வேலைக்கு சேர்க்கின்றனர். ஒரு தொழிலாளி கேள்வி கேட்டாலே போதும். வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அவரது உறவினர் யார் இருந்தாலும் அவரும் விரட்டியடிக்கப்படுவது நிச்சயம். இதுதான் தொழிலாளி—முதலாளி உறவை 'ஆரோக்கியமாக' வைத்திருக்கும் டிவிஎஸ்ஸின் 'சிதம்பர' ரகசியம்.





படிப்பகம்

www.padippakam.com

எப்படி கொத்தடிமைகள் தங்கள் இஷ்டத்திற்கு வேலையை விட்டு நிற்கமுடியாதோ அது போலதான் டிவிஎஸ் தொழிலகங்களிலும். தொழிலாளி தனக்கு வேலை செய்ய விருப்பமில்லை என்றால் விட்டுவிடமாட்டார்கள். முழுக்கவும் பொய்யான மருத்துவ சான்றிதழ் போல் ஏதாவது கொடுத்துதான்வெளியேறமுடியும்.

வேலை வாங்கும் முறையோ எழுதி மாளாது. சதர்ன் ரோடு வேய்சில் கிளார்க்குகள் வேலை நேரம் காலை 8 முதல் மாலை 5 வரை. ஆனால் இரவு 9 மணி சிப்ட் கிளார்க் வந்தபின் கணக்கு ஒப்படைத்து விட்டுதான் பகல் நேர கிளார்க் வெளியே வரமுடியும். புக்கிங் பிரிவு கிளார்க்கோ இரவு 12 அல்லது 1 மணி வரை இருந்து கணக்கு முடித்து, கேஷியரிடம் ஒப்படைக்க வேண்டும். இத்தனை கடின உழைப்புக்கும் 'ஓவர்டைம்' 10 பைசா கூடக் கிடையாது. மறுத்தால் வேலை காலி. உயிருக்கு உத்தரவாதமில்லை.

'லோடுமேன்', 'மெயிண்ட்டனன்ஸ்' தொழிலாளிகள் பிரச்சினை மிகமிக மோசம். 5 பேர் செய்த வேலையை இன்று இரண்டே பேர் செய்யும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். கருங்காலி ஐ. என். டி. யு. சி. சங்கம் இதற்கு உடந்தை. 12-1-87ல் ஐ. என்.டி. சி.யுடன் ஒரு தொழிலாளி கட்டாயம் நாளொன்றுக்கு 140 குவிண்டால் எடை கையாள வேண்டுமென நிர்வாகம் ஒப்பந்தமிட்டிருக்கிறது. 88 பிப்ரவரி வரை இந்த ஒப்பந்தம் பற்றி தொழிலாளிக்கே தெரியாது. 140 குவிண்டால் கையாளவில்லை என சம்பளப் பிடித்தம் நடந்த பின்பே ஒப்பந்தம் பற்றித் தெரிய வந்தது.

டி. வி. எஸ். லாரி டிரைவர்கள் சகலகலா வல்லவர்களாக இருந்தால்தான் வேலை. கிளீனர், லோடு மேன், தபால்காரர், கேஷியர் இப்படி பல அவதாரம் எடுப்பவர் டிவிஎஸ் டிரைவர். இதற்கென சலுகை ஏதுமில்லை.

## நியாயமான கோரிக்கைகள்

சதர்ன் ரோடுவேய்ஸ் தொழிலாளர்கள் அடிப்படையான ஜனநாயக கோரிக்கைகளையே முன்வைக்கின்றனர். அவை நியாயமானவை. தீர்க்கப்பட வேண்டியவை. ஆனால் இந்திய 'ஷா' மன்னர்களின் அரசாட்சியில் அவை அநீதியானவை.

1) ஜனநாய ரீதியில் தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கும் ஒரு தொழிற்சங்கம் தேவை. ஐ.என். டி. யு. சி.யின், டி.வி.எஸ்.சின் கொத்தடிமைகளாக இனிமேலும் செயல்பட முடியாது என்பதே இதன் பொருள்.

2) சதர்ன் ரோடுவேய்சில் மட்டுமே உள்ள பஞ்சப்படி சீலிங் ரத்துச் செய்யப்பட்டு விலைவாசிப் புள்ளிக் கேற்ப வழங்கப்பட வேண்டும். தினம்தினம் மணிக்கொருதம் ஏறிவரும் விலைவாசியில் தொழிலாளி சாப்பாட்டுக்கே பிரச்சினை வரும்படியான பஞ்சப்படி சீலிங்முறை ஒழிக்கப்பட ஒழிக்க பட வேண்டும்.

3) தகுதி, திறமை அடிப்படையில் பதவி உயர்வும், காட்டிக் கொடுக்கும் கருங்காலிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் ரத்துச் செய்யப்படுவதும் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

4) ஐ.என்.டி.யு.சி.யில் இருந்தால்தான் சலுகைகள் என்பது ஒழிக்கப்பட வேண்டும்.

5) மனிதத் தன்மையற்ற கொடூரமான வேலைப்பளுகுறைக்கப்பட வேண்டும். ஒரு ஆள், ஒரு நாளைக்கு 140 குவிண்டால் எடை கையாள வேண்டுமென்ற துரோகத் தனமான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விஞ்ஞான பூர்வமான முறையில் விடை காணப்பட வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கைகள் பரிசீலனை கூட இன்றி மறுக்கப்படுவது மட்டுமல்ல, தொழிற் சங்க உரிமையே மறுக்கப்பட்டுள்ளது.

பீரங்கித் திருடன் ராஜீவ் '21ம் நூற்றாண்டை நோக்கி' என முழங்கி வருகையில், வெறும் இயந்திரங்களை மட்டுமல்ல உயிருள்ள மனித எந்திரங்களையே இயக்கிக் காட்டுகிறேன் பார் என மார்தட்டி மனிதர்களை வெறும் இயந்திரங்களாக இயக்கி வரும் டி.வி.எஸ். நிர்வாகத்தின் எத்தணிப்புகள் நிர்மூலமாக்கப்படுவது உறுதி. விழிப்படைந்து வரும் தொழிலாளர்கள் போராட்டங்கள் இதை உண்மை என்கின்றன.

● மணி

## டி.வி.எஸ்-ன் சட்ட விரோத ஆக்கிரமிப்பு

டி.வி.எஸ். நிறுவனம் அங்கு வேலை செய்யும் தொழிலாளிகளை மட்டுமே சுரண்டிக் கொழுப்பதாக எண்ணிவிட வேண்டாம்.

வீல்ஸ் இண்டியா, சுந்தரம் பாசனர்ஸ், கிளேடன், லூகாஸ்-டிவிஎஸ் என வரிசையாக தொழிற்சாலை இடங்களை வளைத்துப் போட்டுள்ளனர். அப்பகுதிக்கும் யாரும் போகக் கூடாது என கம்பி வலை வேலி போட்டுள்ளனர். ஆனால் புது ஆவடி ரோடை நெருக்கி ரோட்டிலேயே இன்னொரு வேலி போட்டு ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளது டிவிஎஸ் நிறுவனம்.

தனது அன்றாட வயிற்றுப் பாட்டுக்கு சாலையோர வண்டி வைத்து வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளை ஆக்கிரமிப்பு எனச் சொல்லி அடித்து நொறுக்கும் இந்த அரசு இங்கு கைகட்டி வாய் பொத்தி சேவகம் செய்கிறது. நகரப் பேருந்துகள் அந்த வேலியருகே பயணச் சீட்டு விநியோகிக்கக் கூடாது என போர்டு மாட்டியுள்ளது. வேலியருகே நிற்கும் பஸ்ஸால் உற்பத்தி பாதிக்கப்படுகிறதாம்! இப்படியே விட்டால் சாலையை எனது என ஆக்கிரமிப்பு நடத்தி போகிற வருகிற வண்டிகளுக்கு வரி வசூலித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தற்போது உள்வட்ட சாலை ஒன்று வீல்ஸ் இண்டியா கம்பெனியை ஒட்டிச் செல்கிறது. அந்தச் சாலையை நூறு அடி சாலையாக விரிவுபடுத்த திட்டமிட்டது அரசு. தற்போது அந்த சாலையின் கிழக்குப் பக்கம்ஐசிஎப் கம்பெனியிலிருந்து தயாரித்த பெட்டிகளை கொண்டு வர ஒரு ரயில்வே லைன் உள்ளது. மேற்குப் பக்கம் வீல்ஸ் இண்டியா கம்பெனியை ஒட்டி பெரும் இடைவெளி (புறம்போக்கு) உள்ளது. சாலையைவிரிவுபடுத்த இந்தபுறம்போக்கை பயன்படுத்தாது ஏற்கனவே இருந்த ரயில்வே லைனை சாலையாக விரிவுபடுத்த தீர்மானித்து, தற்போது புது ரயில்வே லைன் போடப்படுகிறது.

நமது வரிப்பணம் வீணாவது மட்டுமல்ல, டிவிஎஸ்ன் கிழக்குப் பக்கமும் ஆக்கிரமிப்பு நடத்த மக்கள் அரசே அங்கீகாரம் தருவதுதானே இது?

இப்படிப்பட்ட சுரண்டல், அடக்குமுறை, ஆக்கிரமிப்பாளர்களையும், இவர்களுக்கு துணை போகும் அரசையும் இனியும் நாம் சகித்திருப்பது முறைதானா?

படியுங்கள்!
புதிய கலாச்சாரம்



படிப்பகம்

www.padippakam.com

# நஞ்சாகிப் போனது உணவு! ஆட்சியும் நஞ்சானது!



முருதியன்ஜாய் மண்டல். **மே. வங்கத்தின் பெஹாலா சேரிப்** பகுதியில் வாழும் 55வயது பெரியவர். கடந்த ஜூலை 16 அன்று மதியம் தன் குடும்பத்தோடு சேர்ந்து உணவருந்தினர். சிறிது நேரத்தில் அவரது கை கால்கள் மரத்துப் போனது. கைகால்களை அசைக்கவோ எழுந்து நிற்கவோ அவரால் முடியவில்லை. நிலைமை மோசமாகவே அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். அன்று அவரைப் போலவே 218பேர் கை கால்கள் முடமாகிப்போய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இம்மக்கள் பயன்படுத்திய சமையல் எண்ணையே நஞ்சாகிப் போனதாலேயே இக் கோரமான விளைவு ஏற்பட்டது. போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கத்தில் நியாய விலைக் கடைகளில் குறைந்த விலையில் விற்கப்படும் ஒருவகை காட்டுக் கடுகு எண்ணெயை பாமர மக்கள் சமையல் எண்ணெயாகப் பயன்படுத்துவது வழக்கம். அத்தியாவசியப் பொருள் விநியோகக் கழகத்தின் மூலம் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் சுத்தரிக்கப்பட்ட இந்த சமையல் எண்ணையை, வர்த்தக சூதாடிகள் அபகரித்துக் கொண்டு அதற்குப் பதிலாக சுத்திகரிக்கப் படாத கச்சா எண்ணெயில் மணமும் நிறமும் பெறுவதற்காக அதில் டி.சி. பாஸ்பேட் எனும் கொடிய நஞ்சைக் கலப்படம் செய்து ரேஷன் கடைகளுக்கு விநியோகித்தனர். கல்கத்தாவின் புறநகர்ப் பகுதியான டொகலாவிலுள்ள கரிப் பந்தர் நியாய விலைக் கடையிலேயே பழி பாவங்களுக்கு அஞ்சாமல் இப்பாதகச் செயலைச் செய்து சேரிவாழ் மக்களுக்கு விநியோகித்தனர்.

டி.சி. பாஸ்பேட் எனும் நச்சு ரசாயனப் பொருள் பிளாஸ்டிக் ஆலைகளில் கரைப்பானாகப் பயன்படுத்தப்படுகிறது. இது சுத்திகரிக்கப்படாத காட்டுக் கடுகு எண்ணையில் எளிதில் கரைவதோடு எண்ணையின் மணமும் நிறமும் விலையுயர்ந்த கடுகு எண்ணையைப் போலவே இருக்குமாம். ஏற்கனவே 16 ஆண்டுகளுக்கு முன்னர் இது போலவே சமையல் எண்ணை கலப்படத்தால் கல்கத்தாவின் டம்டம் பகுதியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மக்கள் கைகால் முடமாகிப் போனார்கள். அமெரிக்காவில் இதே நச்சு ரசாயனப் பொருள் ஜிஞ்சர் ஒயினில் போதைக்காக கலக்கப்பட்டதால் 16,000 பேர்முடமாகிப் போனார்கள். நவீன விஞ்ஞான மருத்து வசதி இருந்தும்கூட **அவர்களில் ஒரு சிலரே முடக்கு** வாதத்திலிருந்து மீள முடிந்தது. காரணம், இந்த ரசாயனப் பொருள் முதுகுத் தண்டு வடத்தையே தாக்கி நரம்பு மண்டலத்தைச் செயிலிழக்கச் செய்யும் கொடிய நஞ்சாகும்.

ஜூலை 17ம் நாளன்று ஒரு சிலநூறாக இருந்த பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அடுத்த இரு நாட்களுக்குள் ஆயிரமாக உயர்த்தது. தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகிறது. இதுவரை 1500க்கும் மேற்பட்ட பாமர மக்கள் கை கால்கள் முடமாகி பாதிக்கப்பட்டுள்ளதாக அரசே கூறுகிறது. மெதுவாகவே உடலில் வினையாற்றக்கூடிய இந்நச்சு சமையல் எண்ணெயால் இன்னும் எத்தனைபேர் அடுத்துவரும் நாட்களில் பாதிக்கப்படுவார்களோ, தெரியவில்லை!

போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கத்தில் உணவு எண்ணெய் மட்டுமல்ல. உண்ணும் ஒவ்வொரு கவளம் உணவும், குடிக்கும் ஒவ்வொரு குவளை குடிநீரும்கூட நஞ்சாகவே உள்ளது. 1983—84ல் பாமாயிலில் இது போலவே கலப்படம் செய்து விற்கப்பட்டதாக சமீபத்தில் வெளியான தணிக்கை மற்றும் கட்டுப்பார்ட்டுத் துறையின் அறிக்கையே குற்றம் சாட்டுகிறது. கை கால்களை முடமாக்கித் தாக்கக்கூடிய கேசரி பருப்பு எனப்படும் ஒரு வகை நச்சு காட்டுப் பருப்பு பல மாநிலங்களிலும் தடை செய்யப்பட்டிருப்பினும் மேற்கு வங்கத்தில் சர்வசாதாரணமாக விற்கப்படுகிறது. இன்னும் மிளகாய்த் தூளில்செங்கல் பொடி, மிளகுடன் காட்டு விதைகள், மிட்டாய்களில் பயன்படுத்தப்படும் நஞ்சூட்டும் வண்ணங்கள் என்றிப்படியே டீத்தூள், வனஸ்பதி உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களுமே கலப்படமாகி விட்டதாக மருத்துவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது எங்கள் தவறல்ல; ஊழல் அதிகாரிகளால் ஏற்பட்ட விளைவு என்று நகராட்சி சுகாதார அதிகாரிகள்மீது பழியைப் போட்டுவிட்டு ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். எண்ணை கலப்படத்தால் ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டது பற்றி பாராளுமன்றத்தில்காங்கிரசு கட்சியினர் கேள்விஎழுப்பிய போது, “அது மாநிலப் பிரச்சினை; டெல்லியில் சமீபத்தில் காலரா நோய் தாக்கி ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டு போனதுதான் தேசியப் பிரச்சினை; அதைத்தான் விவாதிக்க வேண்டும்” என்று கீழ்தரமான முறையில் இப்போலிகள் ஊளையிட்டனர்.

மே.வங்கத்தில் பேரபாயமாக கலப்படமாகியிருப்பது உணவுப் பொருட்கள் மட்டுமல்ல; போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியும் தான். ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தையும் ஊழல் அதிகார வர்க்கத்தையும் வைத்துக் கொண்டு தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்து மக்களுக்கு சேவைசெய்து கொண்டே புரட்சிக்குத் தயாரிப்பு செய்வதாக போலிகள் பசப்பினார்கள். ஆனால் போலிகளின் கொள்கையும், தேர்தல் பாதையும்ஆட்சியும் நஞ்சானது, கலப்படமானது; மக்களுக்கு கேடு விளைவிக்கக் கூடியது என்பதை இச்சம்பவம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## இழந்த மானத்திற்கு விலைபேசும் இழிபிறவி



தோலிருக்க சுளை முழுங்கும் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய சேர்மன் சூசைராஜ்என்பவருடைய ஊழல், மோசடி, அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி தொடர்ச்சியாக புதிய ஜனநாயகத்தில் செய்தி—கட்டுரைகள் வெளிவந்ததும், ஆத்திரமடைந்த சூசைராஜ் அடியாட்களை வைத்து திருவோணம் ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களைத் தாக்கினார். ஆனாலும் அஞ்சிவிடாமல் இம்'மா மனிதரை' விவிமுவும் புதிய ஜனநாயகமும் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தன.

எரிச்சலடைந்த சூசைராஜ் தனது மானம் கப்பலேறிவிட்டதாகவும், அதை ஈடுகட்ட புதிய ஜனநாயகமும், திருவோணம் ஒன்றிய விவிமு அமைப்பாளர் தோழர் இராம. துரை மாணிக்கமும் தலா ஒரு லட்ச ரூபாய் நட்ட ஈடு தர வேண்டுமென்றும் இத்தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்தாவிட்டால் வழக்கு தொடரப் போவதாகவும் வக்கீல் நோட்டீசு அனுப்பி மிரட்டிப் பார்த்தார்.

ஆனால் நமது பத்திரிக்கை வெறும் செய்தி ஏடு அல்ல; அது உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்ட புரட்சிகர இயக்கத்தின் ஒரு அங்கம் என்பதை பாவம், அவர் மறந்துவிட்டார்.

நமக்கும், விவிமு அமைப்பாளருக்கும் வக்கீல் நோட்டீசு கிடைத்த அடுத்த சில நாட்களிலேயே சூசைராஜின் கொஞ்சநஞ்ச மானமும் முச்சந்தியில்ஏலம் விடப்பட்டது. விவிமு தோழர்கள் கரம்பக்குடியிலும், ஊரணிபுரத்திலும் பொதுமக்கள் கூடுமிடங்களில் மானங்கெட்ட சூசைராஜை அம்பலப்படுத்தி தட்டிகள் எழுதிவைத்தனர்.

பகுதிவாழ் உழைக்கும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவற்றைப் படித்துவிட்டு சூசைராஜை வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டு காறி உமிழ்ந்துவிட்டு சென்றனர்.

இச்செய்தியை அறிந்ததும் ஆப்பசைத்த குரங்காக அலறிய சூசைராஜ் கும்பல் போலீஸ் துணையோடு தட்டிகளை அகற்றி போலீஸ் நிலையத்திற்குகொண்டு சென்றனர். இது பற்றி விவிமு தோழர்கள் போலீஸ் நிலையம் சென்று விசாரித்தபோது டிஎஸ்பி ஆணைப்படி, 41 வது பிரிவு குற்றச் சட்டப்படி தட்டிகளை அகற்றி அவற்றை தாலுகா அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் மழுப்பினர்.

இதற்கிடையே சூசைராஜ் கும்பல் விவிமு தோழர்களிடம் சமரசம் கோரி, பஞ்சாயத்தின் மூலம் பேசித் தீர்ப்போம் என்று இறங்கி வந்துள்ளது. ஏற்கனவே இதுபோல சில ஊழல் பெருச்சாளிகளையும், மக்கள் விரோதிகளையும் புதிய ஜனநாயகமும் புரட்சிகர அமைப்புகளும் அம்பலப்படுத்தத் தொடங்கியதும் தமது மானத்திற்கு விலைவைத்து நட்ட ஈடு கேட்டு எம்பிக் குதித்தவர்கள் மேலும் அம்பலப்பட்டு பின்னர் அடங்கிப் போனார்கள். அந்த வரிசையில் இப்போது மோசடிப் பேர்வழி சூசை ராஜ"ம் சேர்ந்துள்ளார். ●

## அறிவிப்பு


**அன்பார்ந்த வாசகத்தோழர்களே, முகவர்களே!**

உங்களது உறுதியான ஒத்துழைப்பினாலும், ஊக்கமான ஆதரவினாலும் புதிய ஜனநாயகம் கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தடையின்றி பீடு நடைபோட்டு முன்னேறி வருகிறது. புற்றீசல்கள் போல் நாளும்பெருகி வரும் மஞ்சள்—மசாலா பத்திரிக்கைகளுக்கு மத்தியில் புரட்சிகர அரசியலைப் பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் எடுத்துச் செல்லும் நோக்கில் நமது இதழை 'குறைந்த விலையில்' வெளியிட்டு வருவதும், புரட்சிகர சக்திகளிடம் நமது இதழ் கணிசமான வீச்சை ஏற்படுத்தியிருப்பதும் உங்களது அளப்பரிய உழைப்பினால்தான்.

ஆனாலும் நமது முன்னேற்றத்துக்குத் தடைக்கற்களாக ஒருபுறம் நிதிநெருக்கடியும் மறுபுறம் விலையேற்றமும் நமது பத்திரிக்கையை தொடர்ந்து அச்சுறுத்துகின்றன. தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடி விற்பனையை உயர்த்தியும், நன்கொடைகள்—சந்தாக்கள் திரட்டியும் நாம் இந்நெருக்கடிகளை ஓரளவு சமாளித்து வந்தோம்.

ஆனால் பாசிசராஜீவ் கும்பல் உள்நாட்டு செய்தித்தாள் காகித விலையை திடீரென 50 சதவீதத்துக்கும் மேல் உயர்த்தியுள்ளதைத் தொடர்ந்து, அதுவரை சற்றே குறைத்த விலையில் இருந்த அன்னிய செய்தித்தாள் காகித விலையும் உயர்ந்து விட்டது. கள்ள மார்க்கெட் வியாபாரிகள் வழக்கம் போலவே பதுக்குவதால், தட்டுப்பாடு அதிகமாகி மீண்டும் விலை உயர்கிறது.

காகித விலையேற்றம் ஒருபுறமிருக்க, மறுபுறம் கடந்த இரண்டாண்டுகளாக அடுத்தடுத்து தாக்கிய தபால் கட்டண உயர்வும், ரயில்வே சரக்குக் கட்டண உயர்வும், பின்னர் ஈழப்போரைத் தொடர்ந்து பொதுவில் ஏற்பட்ட விலையேற்றமும் காரணமாக இன்று நமது புதிய ஜனநாயகம் ஒரு பிரதியின் அடக்க விலையே ரூ.1.25 ஆகிவிட்டது. இதனால் நமது பத்திரிக்கை மிகவும் நட்டப்பட்டு, முறையாக கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது.




**எனவே நமது இதழை முறையாகவும் நட்டமின்றியும் கொண்டு வரும் நோக்கில், செப். 1 முதல் இதழ்விலையை ரூ. 1–50 ஆக உயர்த்துவது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.**

தவிர்க்கவியலாத, நியாயமான இம்முடிவை ஏற்பீர்கள் என்று நம்புகிறோம். ஒரு பொறுப்பான விவசாயியைப் போல இப்புதிய ஜனநாயகப் பயிரை அக்கறையுடன் பாதுகாத்து வளர்த்து வரும் உங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் என்னும் நாடுகிறோம்.

தோழமையுடன்,
ஆசிரியர்குழு,
புதிய ஜனநாயகம்



படிப்பகம்

www.padippakam.com

### தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலில் நுழையத்தடை

# நீங்கிவிடவில்லை; நீடிக்கிறது அவமானம்!

'தீண்டாமை— ஒரு சமூக குற்றம்; சட்டப்படி தீண்டாமை தண்டனைக்குரிய குற்றமும் கூட.'

இந்திய அரசியல் சட்டத்தின் 17வது விதி இது. அப்படியா சேதி? அரசியல் சட்டத்தை தூக்கி யாக குண்டத்தில் போடு என்று நெற்றிக்கண்ணை திறக்கிறார், பூரி சங்கராச்சாரி. "மத ஆச்சாரப்படி அரிசனங்கள் கோவில்களுக்குள் நுழைய முடியாது. அனுமதிக்கவும் கூடாது" இப்படி எதிர் ஆணையிடுகிறார் ஆண்டிப்பண்டராம்!

"மக்களால், மக்களுக்காக" எழுதப்பட்டஅரசியல் சட்டமல்ல, இந்தமதவெறி பண்டாரத்தின் ஆணைதான் ஆளுவோரின் கொள்கையாகிறது. நமது அனுபவத்தில் காணும் உண்மை இது. அரசியல் சட்டம் கழிப்பறை காகிதமாகவும்பண்டாரத்தின் ஆணை ஆயுதப் பலத்தோடும் அரியணை ஏறுகிறது.

நாத்வாரா, ராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் அருகில் இருக்கும் சரித்திரப் புகழ் வாய்ந்த கோயில். ஆரம்பம் முதலே இக்கோயிலில் 'தாழ்த்தப்பட்ட' மக்கள் நுழைவது இந்துமத வெறியர்களால் தடை செய்யப்பட்டிருக்கிறது. தடையை மீறி உள்ளே சென்றால் ஆண்டவன் காப்பாற்றமாட்டான் என்பதை உணர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் இதுவரை அத்தடையைச் சுயமாக மீறியதில்லை.

பூரிசங்கராச்சாரியின் வாய்க்கொழுப்பை அடுத்து சினந்தெழுந்தார் சுவாமி அக்னிவேஷ். இவரும் ஒரு இந்துமத துறவிதான். இருந்தாலும் கலியுக மாற்றங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு இந்துமதம் புனரமைக்கப் படவேண்டும் என்ற கோட்பாடுடைய மதசீர்த்தவாதி. ஆதரவாளர்களை திரட்டிக் கொண்டு "அரிசனங்களோடு ஆலய பிரவேசம் செய்யப்போகிறேன்" என்று நாத்வாரா நோக்கி பாதயாத்திரை மேற்கொண்டார். பாசிச ராஜீவின் அடியொற்றி ராஜஸ்தான் மாநில காங்கிரசு ஆட்சி தடையுத்தரவு பிறப்பித்து சுவாமி அக்னிவேஷ் குழுவின் பாதயாத்திரையை சட்டவிரோதமாக்கியது.

பாரதீய ஜனதா கட்சியின் தலைமையில், அதன் பல்வேறு பிரிவு இந்துமதவெறி அமைப்புகள், மற்றும் சனாதனிகள் நேரடியாக பங்குகொண்ட அக்னிவேஷ் எதிர்ப்பு ஆர்பாட்ட ஊர்வலங்கள் மட்டும் தடையேதும் இல்லாமல் வெறியாட்டம் போட்டது. கடையடைப்பு, கல்லெறி, மதவெறி பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. சுமார் 5,000 இந்துமத வெறியர்கள் அமைப்பு ரீதியில் திரண்டு, காங்கிரசு கட்சி மற்றும் ஆட்சியின் ஆதரவோடு அக்னிவேஷ் ஊர்வலத்தை சிதறடிப்பதில் இறங்கினர்.

வேடிக்கை என்னவென்றால், இந்துமத வெறியர்களின் அட்டகாசங்களுக்கு பதிலடி கொடுக்க, தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிரகற்ற தலைவர்கள் என்று கூறி கொண்டவர்கள் எவரும் முன்வரவில்லை. பாதயாத்திரையில் கலந்துகொள்ள முதலில் ஒப்புதல் கொடுத்துவிட்டு பிறகு பின்வாங்கிக் கொண்டார், பிரகாஷ் அம்பேத்கார். இந்துமத வெறியர்களிடமும், காங்கிரசிடமும் நேரடியாக மோதுவதை கவனமாக தவிர்த்தனர் தலித் தலைவர்கள். பட்டம், பதவிகளுக்கு காங்கிரசிடம் கையேந்த வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு.

இந்து மதவெறி ஆதரவு பத்திரிக்கைகளும் பண்டாரங்களும் சேர்ந்து கொண்டு பிரச்சினையை அக்னிவேஷ் பெரிதுபடுத்துவதாக சாடித்தீர்த்தன. 'அரிசனங்கள் எந்தக் கோயிலில் அனுமதிக்கப்படாமல்இருக்கின்றனர்?'என்று கேள்வி எழுப்பி, நகைக்கத்தக்க பதிலையும் அவர்களே கூறினார்கள். "மற்றவர்கள் மாதிரி, அரிசனங்களும் சுத்தமாக வந்தால் யாரும் அவர்களை தடுப்பதில்லை" என்றனர்.

இந்த அண்ட புளுகை என்னவென்பது? எந்த கிராமத்தில் மிகவும் சுத்தத்துடன் வரும் அந்த ஊர் தாழ்த்தப்பட்ட மக்களை வழிபாட்டுக்குஅனுமதிக்கிறார்கள் என்பது ஆண்டவனுக்குதான் வெளிச்சம்!

கிராமப்புறங்களை விட்டு தள்ளுங்கள். நகர்ப் புறங்களில் இருக்கும் கோயில்களிலாவது எந்த ஒரு 'அரிசன'னாவது தனது சாதியை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியப் பிறகு அனுமதிக்கப்படுவனா? தங்களுடைய சாதியை மறைத்துக் கொண்டு, திருடர்கள் மாதிரி தானே அவர்கள் கோயிலுக்குள் வழிபாட்டுக்கு செல்ல வேண்டிய நிலைமை! அதுவும் ஊர், முகம் தெரியாதவரைதான் அவர்கள் தப்பிக்க முடியும். இது ஜோடிக்கப் பட்டகட்டுக் கதையோ, அள்ளி வீசப்படும் அவதூறோ அல்ல! எண்ணற்ற சம்பவங்கள் இதற்கு சாட்சியாக இருக்கிறது. இந்நிலைமை, பஞ்சைப் பராரியாக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் அல்ல, சமூகத்தில் 'அந்தஸ்த்'தோடு எம்.எல்.ஏவாய், மந்திரியாய் இருக்கும் 'தலைவர்'களுக்கே இந்த கதிதான்.

✱ ஆந்திராமாநிலம் கர்னூல் மாவட்டத்தில் இருக்கும் ராகவேந்திரா கோயிலில் ஒரு நிகழ்ச்சி. '78ஆம் ஆண்டில், எர்ரன்னா என்ற இ.காங்கிரசு எம்.எல்.ஏ ஒருவர் தம்மந்திரி சகா

பூரி சங்கராச்சாரியின் வாய்க்கொழுப்பை எதிர்த்து நாத்வாரா கோயிலில் அரிசனங்களுடன் நுழைய பேரணி நடத்தும் சுவாமி அக்னிவேஷ். அவரைக் கைது செய்யும் காங்கிரசு போலீசு.



www.padippakam.com

# மக்கள் எனும் இரும்புக் கோட்டையை யாராலும் வெல்ல முடியாது!



பாசிச ராஜீவ் கும்பலின் அணு ஆயுத ஏவுகணைத் திட்டத்திற்கு எதிராகக் கடந்த மூன்றாண்டுகளாகப் போராடி வந்த ஒரிசாவின் பாலியபால் பகுதிவாழ் மக்கள் வெற்றியைச் சாதித்திருக்கிறார்கள். விவசாயிகளும் மீனவர்களும் நிறைந்த பாலியபால் பகுதியில் ஏறத்தாழ ஒரு லட்சம் மக்களின் வாழ்வைப் பறித்து ஏவுகணைத் தளம் நிறுவ போர் வெறி பிடித்தலைந்த ராஜீவ் கும்பல், பாலியபால் மக்களின் உறுதியான-விடாப்பிடியான—ஒற்றுமையான போராட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் தனது கொலைகாரத் திட்டத்தை தள்ளிப் போட்டு வந்தது. இனியும் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இத்திட்டத்தை பாலியபாலிலிருந்து கர்நாடக மாநிலத்தின் அரபிக் கடலை ஒட்டியுள்ள பீஜப்பூர் பகுதிக்கு மாற்ற இப்போது முடிவு செய்துள்ளது.

அச்சுறுத்தல்கள் — மிரட்டல்கள் எதற்கும் பணியாமல் உறுதியாகப் போராடிய பாலியபால் மக்கள் வெற்றி பெற்றார்கள். பாசிச ராஜீவ் கும்பல் மக்கள் சக்தி முன்னே மண்டியிட்டது. உரிமைக்கும் வாழ்வுக்குமான உழைக்கும் மக்களின் உறுதிமிக்க போராட்டத்தை எந்த சக்தியாலும் வெல்ல முடியாது என்பதை மீண்டும் நிரூபித்துக்காட்டி பாசிச கும்பலைப் பணியவைத்த பாலியபால் மக்களுக்கு எமது புரட்சிகர வாழ்த்துக்கள்!

—ஆசிரியர்குழு
புதிய ஜனநாயகம்

---

வுடன் அக்கோயிலுக்கு சென்றார். அவரைக் கோயிலுக்குள் செல்ல விடாமல் தடுக்க, அங்கிருந்த இந்து மதவெறி அதிகாரிகள் நரித்தனத்தில் இறங்கினர். மந்திரியுடன் இருந்த அவரை கோயிலின் உயர் அதிகாரி சந்திக்க விரும்புவதாகக் கூறி தனியாக அழைத்துச் சென்றனர். அதிகாரியைச் சந்தித்துவிட்டு திரும்பிய எம்.எல்.ஏவுக்கு அதிர்ச்சி! கோயிலின்வாசல் கதவு இழுத்து மூடப்பட்டிருந்தது. காரணத்தை உணர்ந்த எம்.எல்.ஏ பதில் ஏதும் பேசாமல் வீடு போய் சேர்ந்தார். பிறகு இவ்விசயம் சட்ட சபையில் கிளப்பப்பட்டது.

● நாட்டின் பாதுகாப்பு அமைச்சராய் இருந்த ஜெகஜீவன் ராமுக்கும் இதே கதிதான். வட மாநிலத்தில் அவர் திறந்துவைத்த ஒரு உயர்சாதி இந்து தலைவரின் சிலையை திரும்பவும் பல சடங்கு—சம்பிரதாயங்கள் செய்து கழுவி அதன் பிறகுதான் பார்வைக்கு வைத்தனர், இந்துமத வெறியர்கள்

● ஜி.எஸ்.ஷெட்டி. குஜராத்தில் கவர்னராயிருந்த இவர் ஒரு கிருஸ்த்துவர் என்ற காரணத்தினால், கடைசிவரை அவரை துவராகாவில் இருக்கும் ஜெகந்நாத் கோயிலில் நுழையவே விடவில்லை. பாசிச இந்திராவுக்கும் இதே கதிதான். அவர் பார்சி கணவரை மணந்தவர் என்பதற்காக அவரையும் அக்கோயிலின் உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. இப்பட்டியல் இன்று வரை நீண்டுக் கொண்டே போகிறது. இந்த லட்சணத்தில், சுத்தமாக இருந்தால் போதும்; எந்த அரிசனனும் கோயிலினுள் சென்று வழிபடலாம் என்பதை நம்பச் சொல்கிறார்கள் இந்துமத வெறியர்கள்.

தடையை மீறி கோயிலினுள் வழிபாட்டுக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதவெறியர்களால் எப்படிகொத்தி குதறப்படுகிறார்கள் என்பதற்கு ஆந்திரா மாநிலத்தில் வெளிவந்த புள்ளி விபரங்களே சாட்சி பகற்கின்றன. அரிசனங்கள் வழிபாட்டுக்கு கோயிலுக்குள் நுழைந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக 86 ஆம் ஆண்டில் மட்டும் சிறிதும், பெரிதுமாக அம்மாநிலத்தில் 493 கலவரங்கள் நிகழ்ந்துள்ளன. இது அரசே தரும் புள்ளி விபரம்.

● பிரபலமான சினிமா பாடகரான ஜேசுதாஸ் ஒரு கிருஸ்த்துவர் என்ற காரணத்தினால், கேரளத்தில் இருக்கும் ஐயப்பன் கோயிலினுள் கச்சேரி நடத்த அவரை அனுமதிக்கவில்லை. ஆனால், அவர் பாடிய பாடல்கள்தான் ஐயப்பனை பிரபல்யபடுத்திக் கொண்டிருக்கிறது.

இப்போது நாத்துவாரா விவகாரம் நாடாளுமன்றத்தில் பூசி மெழுகப்படுகிறது நாட்டில் எங்கும் அரிசனங்கள் கோயிலுக்குள் நுழைய தடையேதும் இல்லையென முழு யானையையே கைக்குள் மறைக்க முயற்சிக்கிறது பாசிச ராஜீவ்கும்பல். அதற்கு முதல்படியாக சில அரிசனங்களை கோயிலுக்குள் அனுமதித்து வேடிக்கை காட்டுகிறார்கள்.

‘மதசார்பற்ற சமதர்ம சோசலிச குடியரசு’, ‘தீண்டாமை ஒரு சமூக குற்றம்’ என்று அலங்காரமாக சட்டத்தில் பொறித்து காட்சிக்கு வைத்து விடுவதால் தீர்ந்துவிடும் பிரச்சினை அல்ல இது. மொத்த சமூக அரசியல் பொருளாதார கலாச்சாரத்தை யார் கட்டுப்படுத்துகிறார்கள்; வழி நடத்துகிறார்கள் என்பதில் பின்னிபிணைந்து இருக்கும் பிரச்சினை இது. நிலப்பிரபுத்துவ அடிமை நுகத்தடியிலிருந்து நாட்டை விடுவிக்கும் போராட்டத்தை முன்னெடுக்காதவரை நிலப்பிரபுத்துவ அடிமை கலாச்சாரத்திலிருந்து விடுதலைப் பெற நினைப்பதுபகற்கனவே!

● பச்சையப்பன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.

படிப்பகம்

www.padippakam.com



## இதுதான் இன்றைய இந்தியா

வெற்றிகரமாக ஒரு மாத காலம் தொடர்ந்த ஆசிரியர்—அரசு ஊழியர் போராட்டத்தை சகலவழிகளிலும் ஒடுக்கிய தமிழக போலீசின் உச்சக்கட்ட வெறித்தனம் இது. பட்டப்பகலில், நட்ட நடு வீதியில், பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்—அரசு ஊழியர் மத்தியில் அரங்கேற்றப்பட்ட அக்கிரமம் இது. வெறி பிடித்த நாயைக்கூட நாய் வண்டியில் இப்படி தூக்கி வீசக் கூடாது. அதற்கென ஒருமுறை உண்டு. **அதன்படிதான் நாயை அப்புறப்படுத்தவேண்டும்.** இல்லையானால் அது மிருகவதை சட்டப்படி குற்றமாகும்!

ஆனால் ஆசிரியர்—அரசு ஊழியர் போராட்டங்களின்போது மட்டுமல்ல, சமூகத்தின் எந்த பிரிவு மக்கள் போராடினாலும் அவர்கள் மீது உடனே கண் மூடித்தனமாக பாய்ந்து அரசுக்கு தனது விசுவாசத்தை நிரூபிக்கிறது போலீசு. இப்போதும் கூட 'மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ்' எனப்படும் சென்னை உரத்தொழிற்சாலையில் போராடும் பெரும்பான்மையான 'கான்ட்ராக்ட்' தொழிலாளர் பிரதிநிதிகளையும், தொழிற்சங்க தலைவர்களையும் சுற்றி வளைத்து தொழிற்சாலையின் வளாகத்துக்குள்ளேயே மிருகத்தனமாக தாக்கியது. கையில் விலங்கு மாட்டி பயங்கர கிரிமினல் குற்றவாளிகள்போல் இழுத்து சென்று அவமானப்படுத்துகிறது.

இதோ கழுத்தில் கை வைத்து நெட்டி இழுத்து செல்லப்படும் நபர் யார் தெரியுமா? குஜராத் மாநில போலீசு துறையின் உயர் அதிகாரி! தொழிற்சங்க முன்னோடி; செயல் வீரர். அம்மாநிலத்தில் இருக்கும் பிரதான நான்கு போலீசு தொழிற்சங்கங்களின் கூட்டு கமிட்டியின் அமைப்பாளர். இழுத்து செல்பவர்கள் இந்திய துணை ராணுவத்தைச் சேர்ந்த ராணுவ 'வீரர்கள்'!

தண்டியாத்திரை போன்ற பாசிச ராஜீவின் அரசியல் வாண வேடிக்கைகளை விமர்ச்சித்தார்கள் என்றும், அரசு பயங்கரவாதத்தின் கூலிப்படையாக பஞ்சாபிற்கு போக மறுத்தார்கள் என்றும் குற்றம் சாட்டி குஜராத் போலீசின் பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த முன்னோடி செயல்வீரர்களை துணை ராணுவத்தை அழைத்து மிருகத்தனமாக ஒடுக்கியது குஜராத் காங்கிரசு அரசு.

போராடிய போலீசாரின் குடும்பத்தாரையும் விட்டு வைக்கவில்லை. தடியடி, துப்பாக்கி சூடு, குடியிருப்புகளிலிருந்து விரட்டுவது, பொய் வழக்கு போடுவது, சிறையில் அடைப்பது என பல வழிகளில் மிரட்டியது.

ராணுவத்தை வைத்து விரட்டியடித்து "கலகக்காரர்"களை வெற்றிகரமாக முறியடித்ததாக பிரச்சாரம் செய்தது.

ஒரு பிரிவுமக்களுக்கு எதிராக இன்னொரு பிரிவு மக்களை, **அரசு எந்திரத்தின் ஒரு பிரிவு** ஊழியர்களுக்கு எதிராக இன்னொரு பிரிவை மோதவிட்டு ரத்தம் குடிக்கும், சுரண்டிக் கொழுக்கும் பாசிஸ்ட்டுகளை நாம் ஒன்று சேர்ந்து தூக்கியெறிவது எப்போது?



படிப்பகம்